பொதுசன நூலகம்
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
25 JUL 2005

Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12149)

நாதம் 16 திருவள்ளுவர் ஆண்டு 2036 ஆடி-09 25-07-2005 திங்கட்கிழமை ஓசை-157

பிரதமர் மீது சனாதிபதி கடும் சீற்றம்;
மக்கள் பணத்தைத் திருடினாராம்!

ஜே.வி.பி.யுடன் இணைந்து சிலர் சதிசெய்வதாகவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டு மக்களின் பணத்தைத் திருடுகின்ற, மக்களைக்கொலை செய்கின்றவர்கள் நாட்டின் சனாதிபதிப் பதவிக்கு வரமுடியாது. ஆழிப்பேரலை நிவாரணத்தைக் கொள்ளையடித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் ஆதரவுடன் சிறிலங்கா சனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுகின்றார். கட்சியிலுள்ள சிலர் அரச, அதிகார இலாபங்களைப் பெற சொந்தக் கட்சியையே காட்டிக் கொடுக்கின்றனர். இவ்வாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்தவார இறுதியில் அநுராதபுரத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்காவில் வலிமையான அரசியல் கட்சியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி திகழ்கிறது. நமது கட்சியை வலுப்படுத்த வேண்டிய அவசியம் நமக்குள்ளது. நமது கட்சிக்கு நான் பெரும் தீங்கிழைத்து விட்டேன். ஜே.வி.பியுடன் கூட்டணி வைத்ததுதான் அது. பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பியினருக்கு நமது ஆசனங்களை விட்டுக்கொடுத்திருக்கிறோம்.இந்தக் கூட்டமைப்பை உருவாக்குவதில் தொடக்கத்திலிருந்தே

(12 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவுடன் வான்படைப் பயிற்சி; சிறிலங்கா விமானப்படை திட்டம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்படை தகவலை அடுத்து சிறிலங்காவின் வான்படையினர் இந்தியாவுடன் வான்படைப் பயிற்சிகளில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிககப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பகட்டமாக கடந்த மாதம் சிறிலங்காவின் வான்படை அதிகாரிகள் குழு ஒன்று இந்தியாவுக்கு விஜயம் செய்து பல அவதானிப்புகளை மேற்கொண்டுள்ளது.

எயார் வைஸ் மார்சல் பிரசன்ன குணரட்ன தலைமையிலான குழுவினர் இந்தியாவிலுள்ள பல்வேறு வான்படை பயிற்சித்தளங்களை பார்வையிட்டதாக கொழும்பு ஆங்கில வார இதழொன்று தெரிவித்துள்ளது.

இந்தக்குழுவினர் லக்னோவ், ராஜஸ்தான்,பெங்களூர் போன்ற இடங்களிலுள்ள இந்திய வான்படைத்தளங்களை பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.இதனடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்படை அச்சுறுத்தலை முறியடிக்கும் நடவடிக்கைகளுக்கு வான்படையினர் திட்டமிடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (32)

நிக்கோபாரில் மீண்டும் பூகம்பம்; இலங்கைக்கு ஆபத்து இல்லை

(கொழும்பு)

இந்தியாவின் நிக்கோபார் தீவிற்கு அருகில் நேற்று பூகம்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.7.3 ரிச்டர் அளவாக இது பதிவாகியுள்ளது. இந்தப் பூகம்பம் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஆழிப்பேரலைகளை ஏற்படுத்தலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்தோனேஷியா ,இந்தியா,தாய்லாந்து போன்ற நாடுகளின் கரையோரங்களை இந்த அலைகள் தாக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை ஆழிப்பேரலைகள் தாக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

கருணா குழுவோடு செயற்பட்டவர் வெலிக்கந்தயில் சுட்டுக்கொலை

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த குடாபொக்குன பகுதியில் கருணா குழுவோடு நெருங்கிச் செயற்பட்ட இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றுள்ளது. கணபதிப்பிள்ளை விஜயரட்ணம் (வயது -18) என்பரே கொல்லப் பட்டவராவார்.

சுப்பர்மடம் மீனவர் மூவர் கடற்படையினரால் கைது

(வடமராட்சி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு சென்றதாகக் கூறி பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் நாகர்கோவில் படைத் தளத்தைச் சேர்ந்த படையினரால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி வடக்கின் பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த இம்மீனவர்கள் மூவரும் நேற்றுக் காலை படகொன்றில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கல்கிசை கடலில் நீச்சலுக்குச் சென்ற இருவர் பலி; இருவரைக் காணவில்லை

(கொழும்பு)

கொழும்பு கல்கிசை கடலில் நீச்சலுக்காக சென்ற இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் காணாமல் போயுள்ளனர். இறந்த இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏனைய இருவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நீச்சலுக்காக சென்ற ஏழு பேரில் மூவரை கடற்கரையில் நின்றோர் காப்பாற்றியுள்ளனர்.

குறித்த கடற்பகுதி நீச்சலுக்கு தடை விதிக்கப்பட்ட போதும் அதனை உதாசீனம் செய்தநிலையிலேயே இவர்கள் ஏழு பேரும் நீச்சலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி இன்று எதிர்ப்புதினம் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

பொதுகட்டமைப்புக்கு எதிராக இன்று ஜே வி பியினால் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.இதனை முன்னிட்டு முக்கிய நகரங்களில் ஜே.வி.பி.யி னர் மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் நிகழ்வுகளைத் நடத்தவுள்ளனர்.இதேவேளை பிரதான எதிர்ப்பு நிகழ்வு கொழும்பு கோட்டை புகையிரத மையத்தின் முன்னால் இன்று மாலை நடத்தப்படவுள்ளது.

பொதுக்கட்டமைப்பின் சில சரத்துகளுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை விதித்துள்ளது.எனினும் அரசியல் நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

புலிகள் தாக்குதல் நடத்தக் கூடுமாம்; பாதுகாப்பைப் பலப்படுத்தும் கடற்படை!

சிங்கள நாளிதழ் கூறுகின்றது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற காரணத்தைக்காட்டி சிறிலங்கா கடற்படை பலப்படுத்தப்படுவதாக சிங்கள நாளிதழ் ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கிலிருந்து படையினரை ஏற்றிச் செல்லும் சிறிலங்காக் கடற்படைக் கப்பல்கள் மற்றும் அவற்றுக்கு பாதுகாப்பு வழங்கும் படகுகள் மீது கடல் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர் பயணிக்காத சந்தர்ப்பதில் தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகப் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

கடல் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் விடுமுறையில் செல்லும் நேரம், அவர்கள் கப்பலில் பய ணிக்காத நேரம் ஆகியவை குறித்து புலிகளின் உளவுப் பிரிவு தகவல்களைச சேகரித்துள்ளது.

இதனால் கடற்படையினர் தமது பயணங்களில் கடுமையான பாதுகாப்பை வழங்கும் தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

கைக்குண்டு வீச்சு

(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதான வீதியில் உள்ள ஜெயலனி மௌலானா பள்ளி வாசலுக்கு முன்னாலுள்ள மயானத்திற்கு அருகில் நேற்று கைக்குண்டு வீசு சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது.

மதப் பிரச்சினையின் ஒரு கட்டமாகவே இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனினும் குண்டு வீச்சின் இலக்காகக் கருதப்படும் வணக்கஸ்தலத்திற்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகரை கூட்டமைப்புச் சந்திக்கும்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவை அடுத்து தமது பிரதேசங்களுக்கு நேரடி உதவியை பெற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்த்தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று பிரித்தானிய உயர்ஸ்தானிகரை சந்திக்கவுள்ளார்கள்.

ஏற்கனவே அவர்கள் ஜப்பான், சுவிற்சர்லாந்து மற்றும் ஜேர்மனிய ராஜதந்திரிகளை சந்தித்து தமது நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்கள்.(32)

பொதுசன நூலகம்
2005

வரிவிளம்பரம்

காணிவிற்பனைக்குண்டு

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் 16பரப்புகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- சுகரன் மே/ப V.ஜெகநாதன், மத்தியகல்லூரி முன்,மீனாட்சியம்மன் வீதி,ஆனந்தபுரம், கிளிநொச்சி.

தவறிவிட்டது

செல்வநாயகம்காயத்திரி இல.866திருநகர்,கிளிநொச்சி எனும் முகவரியுடைய தே.அ.அ.இல. 827314153-V நிரந்தரபயண அனுமதியட்டை இல.30455 நி.23.05.2005 ஆம் திகதி முகமாலைக்கும் கிளிநொச்சிக்குமிடையில் பயணிகள் பேருந்தில்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தகவல் -செ.காயத்திரி.

படையினரின் முட்கம்பி வேலியில் சிக்கி பருத்தித்துறையில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

படையினரின் பாதுகாப்பு முட்கம்பி வேலியினுள் சிக்குண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் சிறுகுழந்தையொன்றும் உள்ளடங்கியுள்ளது.

கடந்த வியாழன் இரவு பருத்தித்துறை விடுதி வீதிப்பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் மிக மோசமாக காயமடைந்துள்ள பருத்தித்துறை மணல் ஒழுங்கைப் பகுதியைச் சேர்ந்தவரான பொன்ராசா புஸ்பலலிதா (வயது-28) என்ற இளம் தாய் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்; கடந்த வியாழனன்று பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் சுனாமி கடல்கோள் அனர்த்தத்தினால்பாதிக்கப்பட்ட மீனவர்களிற்கான படகுகள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இரவு வரை இடம்பெற்ற இக்கையளிப்பு நிகழ்வின் பின்னர் குறித்த பெண்மணி தனது குழந்தையுடன் மைத்துனரது துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது. பருத்தித்துறை உயர்பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க எல்லையிலுள்ள விடுதிவீதி ஊடாக அவர்கள் வீடு திரும்ப முற்பட்டுள்ளனர். அவ் வேளையில் எதிரே வந்த வாகனத்திற்கு பாதை வழங்கிய இவர்கள் ஒதுங்க முற்பட்ட வேளையில் அங்கு போடப்பட்டிருந்த படையினரின் சுருள் முட்கம்பி வேலியுள் சிக்குண்டுள்ளனர். சுருள்முட்கம்பி வேலியுடன் வாகனத்தால் நீண்ட தூரம் இழுத்துச் செல்லப்பட்ட இவர்கள் எழுப்பிய அவலக்குரலால் வீதியால் பயணித்த ஏனைய பொதுமக்களால் இவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (27)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நீரிழிவு நிலையத் திறப்பு விழா சிகிச்சை நிகழ்வு நேற்றுக்காலை 10.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் வேலுப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கல விளக்கினை யாழ்.போதனா வைத்தியசாலையின் மயக்கமருந்து நிபுணர் சத்தியமூர்த்தி மற்றும் மூளாய் ஐ.என்.எஸ். நிறுவனத்தின் இயக்குநகர் பொன்மலர்ராஜேஸ்வரன், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபர் திருமதி. வேலுப்பிள்ளை, இருதய வைத்தியநிபுணர் மனோகரன் மற்றும் லண்டன் இரத்தினம் ஞாபகார்த்த நிலையத்தின் இயக்குநர் கலாநிதி நித்தியானந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து நீரிழிவு நிலையத்தின் பெயர்ப்பலகையினை சர்வானந்தா சம்பிரதாய பூர்வமாக திரை நீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கூட்டுறவு வைத்தியசாலையின் நீரிழிவு நிலைய கட்டடத்தை லண்டன் இரத்தினம் ஞாபகார்த்த நிலையத்தின் தலைவர் கலாநிதி நித்தியானந்தன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து கூட்டுறவு வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் சுகுமார் நோயாளி ஒருவரை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தினார். நீரிழிவு நிலையத்தின் கணினிச் செயற்பாடுகளை வைத்தியர் சுகுமார் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கருத்துரைகளை யாழ். போதனா வைத்தியசாலை மயக்க நிபுணர் கணேசமூர்த்தி, லண்டன் இரத்தினம் ஞாபகார்த் நிலையத்தின் தலைவர் கலாநிதி நித்தியானந்தன் மற்றும் சர்வானந்தா, மனோகரன் உலகசுகாதார நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கலாநிதி சிவராசா உட்பட பலரும் வழங்கினர். தொடர்ந்து நீரிழிவு நிலைய கட்டடத்தைகட்டும்போது மேற்பார்வை செய்த மேற்பார்வையாளர் இரத்தின சபாபதி அவர்களுக்கு லண்டன் இரத்தினம் ஞாபகார்த்த நிலையத்தின் தலைவர் கலாநிதி நித்தியானந்தன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

தொடர்ந்து சிகிச்சை பெற வருகைதந்த நோயாளிகளுக்கு இலவச பரிசோதனைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நீரிழிவு நோயாளிகளுக்கு இலவச மருத்துவ ஆலோசனைகளும் மருத்துவ சிகிச்சைகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (37)

குடமியனில் சட்டவிரோத மணல் அகழ்வு சூழல் பாதுகாப்பு அமைப்பால் கண்டுபிடிப்பு

(தென்மராட்சி)

குடமியன் பகுதியில் சட்டவிரோதமாக அகழப்பட்ட மணல் சூழல் பாதுகாப்பு அமைப்பால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குடமியன் பாடசாலைக்கு சற்றுத் தொலைவிலுள்ள தென்னந்தோட்டம் ஒன்றில் சட்டவிரோதமாக அகழப்பட்ட மணல் குவிக்கப்பட்டு ஓலையால் மூடப்பட்டிருந்ததை சூழல் பாதுகாப்பு அமைப்பு கண்டு பிடித்துள்ளது.

நூறுலோட்டுக்கு குறையாத இந்த மணல் எந்தவித அனுமதியும் இன்றி எடுத்துவரப்பட்டு பாரஊர்திகள் மூலம் யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து செல்லப்படவிருந்தது. இந்தச்சட்டவிரோத மண் அகழும் நடவடிக்கையில் சிலர் குழுவாக இயங்கி இருப்பதாகவும் தெரியவருகிறது. இப்பகுதி மக்களின் ஒத்துழைப்புடனேயே இந்த மணல் கண்டு பிடிக்கப்பட்டு இருப்பதாகவும் சூழல் பாதுகாப்பு அமைப்புதெரிவித்துள்ளது. (28)

கைதடி மத்தியில் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்று துப்பாக்கி முனையில் படையினர் மிரட்டல்

(தென்மராட்சி)

கைதடி பகுதியில் ரோந்து சென்ற படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்ட முறுகலையடுத்து அப்பகுதி வீடுகளுக்கு துப்பாக்கியுடன் சென்ற இராணுவத்தினர் வீடுகளிலிருந்த பொதுமக்களை அச்சுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது; கைதடி சந்தியில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் நேற்று இப்பகுதியில் ரோந்து சென்ற பொழுது வீதியால் வந்து கொண்டிருந்த பெண்களிடம் சேட்டை விடமுற்பட்ட சமயம் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் ஒன்றுசேர்ந்து படையினரின் இத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்ததை அடுத்து அப்பகுதியை விட்டு வெளியேறிய படையினர் மீண்டும் நேற்று மாலை அப்பகுதிக்கு மேலதிக படையினருடன் பிரவேசித்து இப்பகுதிப் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்றுகுடும்பத்துடன் சுட்டுக்கொல்வோம் என எச்சரித்துள்ளனர். இச் சம்பவங் களால் இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்துள்ளனர். (28)

பூநகரி சுற்றயல் கூறு வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

(பூநகரி)

பூநகரி வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வைத்தியசாலை அபிவிருத்தி சபையினருடன் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதி மாகாண சுகாதரசேவைப்பணிப்பாளர் சத்தியமூர்த்தி, பூநகரி சுகாதாரவைத்திய அதிகாரி நந்தகுமார் ஆகியோர் வைத்தியசாலைத் தேவைகள் பற்றி கேட்டறிந்தனர். இது விடயமாக வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் சுற்றுமதில், நீர்விநியோகம், தொலைபேசி இணைப்பு, மின்சாரம் என்பன பற்றி தமது வேண்டுகோளை விடுத்ததுடன், தொண்டர் தாதியரை நிரந்தரமாக்க ஆவன செய்யுமாறும் கேட்டுக் கொண்டனர். இது விடயமாக உரியவர்களுடன் கதைத்து சில விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக செய்வதற்குரிய ஒழுங்குகளை மேற் கொள்வேன் எனப் பிரதிமாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (34)

புதிய பயிற்சிநெறி ஆரம்பம்

கிளி/தொழில்நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் 27.07.2005 அன்று தொலைக்காட்சி,வானொலி திருத்தும் பயிற்சிநெறி (வீட்டு மின் இணைப்பிற்கான பயிற்சி) ஆரம்பமாகவுள்ளது. பயிலவிரும்பும் மாணவர்கள் 26.07.2005 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

அதிபர்:-
கிளி/தொழில்நுட்பக் கல்லூரி,
A9-வீதி,
கிளிநொச்சி.

(சி.12378)

13 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்



தாயின்
மடியில்
07
☐
08
☐
1974

தாயக
மண்ணில்
25
☐
07
☐
1993

லெப்டினன்–துரைக்கண்ணன் (விக்ரம்)

வைத்திலிங்கம்–தயானந்தன்
ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி
சம்பவம்:–இதயபூமி–1 தாக்குதலின்போது

தாயைவிட தாய்மண்ணை நேசித்து
தானைத்தலைவன் சேனைதனில்
புலியாகிப் போராடி
களம் தனிலே புயலென புரியவைத்த,
துரைக்கண்ணனே
நீ மறைந்து ஆண்டுகள் பதின்
மூன்று ஆனாலும் மறையாத உன்
நினைவுகளுடன் துயருறும்.

(6386)

பெற்றோர்,சகோதரர்கள்.

முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
30
12
1997

உதிர்வு
04
08
2004

செல்வி .சுசிந்திரராசா சுகீர்த்தனா
(கீர்த்தனா)

தங்கமே தலைமகளே
தரணியில் பிறந்து
திங்கள் முழுமையாய்
திகழாமல் போனதேனோ.

25.07.2005 (இன்று) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

முகவரி:-
கேவில்,
முள்ளியான்.

(6385)

தகவல்:-
ந.சுசிந்திரராசா,
(தந்தை)

5 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

அம்பலவாணர் குலசேகரம் J.P

(இளைப்பாறிய நூலகர்,சாவகச்சேரி டிரிபேர்க் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர்)

என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்.

மகன்
கலைக்கோன்,
(போராளி)

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

தோற்றம்:-26.08.1937
மறைவு :-24.07.2000

(சி.12350)

ஒசாமா பின்லேடனை பாகிஸ்தானில் தேட எந்த நாட்டையும் அனுமதிக்க மாட்டோம்

(நியுயோர்க்)

பாகிஸ்தானில் பின்லேடனைத் தேட எந்த நாட்டையும் அனுமதிக்க மாட்டோம் என்று முஷாரப் தெரிவித்துள்ளார்.

தீவிரமாகத் தேடப்படும் தீவிரவாதியும், அல்ஹைதா இயக்கத் தலைவருமான ஒசாமா பின்லேடனை அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தேடி வருகின்றன. அவர் பாகிஸ்தானில் இருப்பதாகவும், ஆப்கானிஸ்தானில் இருப்பதாகவும் முரண்பட்ட தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில், 'ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் இருந்தால் அவரை நாங்களே கைது செய்வோம். அதற்கான திறமை எங்களிடம் இருக்கிறது. அவர் இங்கு இருப்பதாகத் துப்புக் கிடைத்தால் நாங்களே அவரைப் பிடிப்போம் ஆனால் பின்லேடனைப் பிடிககின்றோம் என்று கூறிக் கொண்டு எந்த நாடாவது அவரைத் தேடி பாகிஸ்தானுக்குள் வந்தால் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருக்கிறார் என்று அமெரிக்கா கண்டு பிடித்திருப்பதாக எங்களுக்கு தெரிகிறது. எங்களது உளவுப் பிரிவினர் பின்லேடனை பிடிப்பது தொடர்பாக அமெரிக்க உளவுப் பிரிவுடன் நல்ல உறவு வைத்திருப்பதுடன், நெருக்கமாகச் செயற்பட்டும் வருகிறது. எங்களது உளவுப் பிரிவு நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

பின்லேடன் உயிருடன் இருப்பதாக நம்புகிறேன். ஆனால் அவர் பாகிஸ்தானில் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் எல்லைப் பகுதியில் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன் இவ்வாறு முஷாரப் தெரிவித்தார்.

இராணுவம் தீவிரவாதிகள் மோதல் நேபாளத்தில் 9 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் அரசாங்கத்திற்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். நேற்று டாவ்க் மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் ஏழு இராணுவத்தினரும் இரண்டு தீவிரவாதிகளும் பலியானார்கள்.

இந்த மாதத்தில் இரு தரப்பினர் இடையே நடைபெற்ற பெரிய மோதல் சம்பவம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

லெபனானில் குண்டு வெடிப்பு 12 பேர் காயம்; கட்டடங்கள் சேதம்

(பெய்ரூட்)

லெபனானில் பெய்ரூட் நகரிலுள்ள முக்கிய வீதியில் வெடிகுண்டு வெடித்ததில் 12 பேர் காயம் அடைந்துள்ளனர்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ரைஸ் பெய்ரூட் சென்றுள்ள நிலையில் அவர் வருகை தந்த சில மணி நேரத்தில் இந்தக் குண்டு வெடிப்பு நடந்துள்ளது. லெபனான் பிரதமர் பரூத் - அல்-சினிஓரா நேரில் சென்று குண்டு வெடிப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டார்.

இரண்டாவது முறையாகவும் கடந்த வியாழனன்று லண்டன் சுரங்கப் பாதையில் குண்டு வெடித்ததையடுத்து கிங்ஸ் குரஸ் புகையிரத நிலையத்தில் காவலில் ஈடுபட்டுள்ள லண்டன் பொலிசார்.

டிஸ்கவரி விண்கலம் நாளை விண்ணில் ஏவப்படும்?

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் டிஸ்கவரி விண்கலத்தை சில நாட்களுக்கு முன் விண்ணில் ஏவ முயற்சி செய்தது. அதில் சிறு கோளாறு ஏற்பட்டதால் நிறுத்தி வைக்கப்பட்டது. அந்தக் கோளாறு சரி செய்யப்பட்டு மீண்டும் சோதனை தொடங்கியுள்ளது. விண்கலம் நாளை இந்திய நேரப்படி இரவு 8.00 மணிக்கு விண்ணில் ஏவப்படும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளை தானியங்கி கமரா படம் பிடித்தது

லண்டனில் பொலிசார் வீடுவீடாகத் தேடுதல்

(லண்டன்)

லண்டனில் குண்டு வைத்த தீவிரவாதிகளைத் தானியங்கி வீடியோ காமரா காட்டி கொடுத்ததை அடுத்து அதிலுள்ள அடையாளத்தை வைத்து அவர்களைப் பிடிக்க லண்டன் பொலிசார் வீடு, வீடாகச் சோதனை நடத்தி வருகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு தீவிரவாதிகள் அந்த வெடிகுண்டுகளை வைத்ததாகத் தெரிகிறது. அவர்களை ரயில் நிலையங்களில் வைக்கப்படடிருந்த தானியங்கி வீடியோ கமராக்கள் படம் பிடித்துள்ளன. அந்தப்படங்களை லண்டன் பொலிசார் பத்திரிகைகளில் வெளியிட்டு அவர்கள் பற்றி தகவல் தெரிந்தால் உடனடியாக பொலிசுக்கு தகவல் தெரிவிக்கும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த நான்கு பேரும் லண்டனில் தான் பதுங்கியிருக்கவேண்டும் என்று பொலிசார் நம்புகிறார்கள். அதைத் தொடர்ந்து பொலிசார் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து லண்டனில் வீடு வீடாகப் புகுந்து சோதனை நடத்தினார்கள். சந்தேகப்படும்படி காணப்பட்டவர்களைப் பிடித்து விசாரணைக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் ரயில் நிலையத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர் தீவிரவாதியல்ல

-பொலிசார் வருத்தம் தெரிவிப்பு

(லண்டன்)

லண்டன் ஸ்டாக்வெல் நிலையத்தில் கடந்தவெள்ளிக்கிழமை லண்டன் பொலிசார் தீவிரவாதி எனக் கருதி ஒருவரைச் சுட்டுக் கொன்றனர். இந் நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டவர் தீவிரவாதி அல்ல எனவும், இதற்காக தாங்கள் வருந்துவதாகவும் லண்டன் பொலிசார் தெரிவித்துள்ளனர். இந் நிலையில் கொல்லப்பட்ட 27 வயது இளைஞர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஜீன் சார்லஸ் டிமெனஜெஸ் எனவும் இவர் கடந்த மூன்று ஆண்டுகளாக லண்டனில் வசித்து வருவது தெரியவந்துள்ளது. இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக பிரிட்டன் அரசிடம் பிரேசில் அரசு விளக்கம் கேட்டுள்ளது.

பலஸ்தீனத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டலீசாரைஸை ரமலாவில் வரவேற்கும் பலஸ்தீன அதிபர் மக்மூத் அப்பாஸ்.

ஈராக்கில் றெபின் என்ற இடத்தில் காயபட்ட அமெரிக்கக் கடற்படையினரை ஏற்றிச சென்ற வண்டி மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்கு தலில் பலியான இராணுவ அதிகாரியின் உடல் இறுதிக்கிரியையின் பின் எடுத்துச் செல்லப்படுகிறது.

சதாம் உறவினர்களின் சொத்துக்கள் அமெரிக்க அரசால் முடக்கம்?

(வோஷிங்டன்)

சதாம் ஹுசைனின் உறவினர்களின் சொத்துக்களை அமெரிக்க அரசு முடக்க உத்தரவிட்டுள்ளது.

ஈராக் அதிபராக இருந்த சதாம் ஹுசைனை அமெரிக்கக் கூட்டணிப் படைகள் போர் தொடுத்து ஆட்சியிலிருந்து அகற்றின. சதாம் ஹுசேன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் இந்த நிலையில்,

ஈராக்கில் அமைந்துள்ள புதிய அரசுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் எதிராக சதாம் ஹுசைன் ஆதரவு தீவிரவாதிகள் அடிக்கடி ஈராக்கில் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

தீவிரவாதிகளுக்கு சதாம் ஹுசைனின் ஒன்று விட்ட சகோதரரின் மகன்கள் யானிர் உமர் அய்மான், இப்ராகிம், பஷார்,சாத் சதாம் ஹுசேனின் முன்னாள் ஆலோசகர் சபாவி ஆகியோர் பொருளாதார உதவிகளைச் செய்து வந்தனர்.தீவிரவாதிகளுக்கு இவர்கள் ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்து பொருட்களை வழங்கி வந்தனர்.

இதன் காரணமாக யானிர், உமர் உள்ளிட்ட ஏழு பேர்களின் சொத்துக்களை முடக்க அமெரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அமெரிக்கப் படைகளுக்கும், ஈராக் மக்களுக்கும் எதிரான நடவடிக்கையில் ஈடுபட பொருளாதார உதவி செய்ததால் இவர்களின் சொத்துக்கள் முடக்கப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் அன்புத் தொல்லையால் போப் பெனடிக் வீட்டில் அவதிப்படும் பெண்

(பெர்லின்)

ஜேர்மனியில் போப் பெனடிக் பிறந்த வீட்டைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் இந்த அதீத ஆர்வத்தால் அந்த வீட்டில் குடியிருக்கும் பெண் நிம்மதி இல்லாமல் தவித்து வருகிறார்.

தெற்கு ஜேர்மனியிலுள்ள ஒரு கிராமத்தில் ஜோசப் ரட்சிங்கர் 1927 ஆம் ஆண்டு பிறந்தார். கடந்த ஏப்ரலில் போப் பெனடிக் ஆகத் தேர்வு செய்யப்பட்டார். கத்தோலிக்க மதத் தலைவராக ரட்சிங்கர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர் பிறந்த வீட்டிற்கு மவுசு கூடியது. உள்ளூர் மக்கள் முதல் சுற்றுலாப் பயணிகள் வரை பெரும் திரளாக வந்து வீட்டைப் பார்வையிட்டு மனம் உருகிச் செல்கின்றனர். வீடு பூட்டி இருந்தால் ஜன்னல் வழியே எட்டிப்பார்ப்பது அழைப்பு மணியை அழுத்துவது எனப் பல வேலைகளில் இறங்குகின்றனர். சில சமயம் கதவுகளுக்குப் பின்னால் இருந்து பிரார்த்தனைகளை நடத்தி விட்டுச் செல்கின்றனர். சிலர் சுவற்றைச் சுரண்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். போப் பெனடிக் பிறந்த வீட்டில் தற்போது கிளவுடியா டாண்டல் என்ற பெண் வசித்து வருகிறார். சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களின் ஆர்வக் கோளாறால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார். 260 ஆண்டுகள் பழமையான வீட்டை கிளவுடியா கடந்த 1999 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கினார். வீட்டை புனரமைக்க சில ஆண்டுகள் சென்றன. இந்த வீட்டை மதச் சின்னமாக்கவும் சுற்றுலாப் பயணிகளுக்கு திறந்து விடவும், பல்வேறு யோசனைகள் கூறப்பட்டு வருகின்றன.

14 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் உசேவ் பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து ஜிஜியாங் ஆற்றில் கவிழ்ந்ததில் அந்தப் பேருந்தில் பயணம் செய்த 14 பேரும் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஜேர்மனியில் விமான விபத்து விமான ஓட்டி உயிரிழப்பு

(பெர்லின்)

ஜேர்மனியின் பாராளுமன்ற கீழ் சபை அருகே புல்வெளியில் சிறிய ரக விமானம் விபத்துக்குள்ளானதில் விமானி பரிதாபமாகப் பலியானார்.

ஜேர்மனியின் பிரண்டன் பாக் நகரில் இருந்து புறப்பட்ட சிறிய ரக விமானம் பெர்லின் நகரை நோக்கி வந்தது. பாராளுமன்றின் கீழ் சபைக் கட்டடம் அருகே பறந்த போது புல் தரையில் விழுந்து தீக்கிரையானது. இதில் விமானி அதே இடத்தில் பலியானார். எந்த வித தீவிரவாத செயலும் இதற்குக் காரணமாக இருப்பதாகத் தெரியவில்லை. இது தற்செயலான விபத்தாகவும் இருக்கலாம். தற்கொலை முயற்சியும் காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியத்தின் உணர்வலைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த எழுச்சிப்பேரணி

- மட்டக்களப்பில் வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் ஏற்பாடு

(மட்டக்களப்பு)

நலிவடைந்து கொண்டிருக்கின்ற சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் தமிழ்த்தேசிய எழுச்சிப் பேரணி எதிர்வரும் 27ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பி.ப 3.00 மணிதொடக்கம் 5.00 மணிவரை தமிழ் பேசும் சமூகம் தமது உணர்வுகளை சர்வதேச சமூகத்திற்கு இந்தப் பேரணி மூலம் உணர்த்தவுள்ளது.

இந்தப்பேரணியில் கலந்து கொள்ளும் மக்கள் பாரம்பரியஉடைகளிலும், பெண்கள் சிவப்பு, மஞ்சள் உடைகளிலும் கலந்து கொள்ளுமாறும் தமிழ் பேசும் மக்களுக்கு இது வரலாற்றுக் கடமை எனவும் அதன் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள் ளனர்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் உணர்வெழுச்சிப் பேரணிகளை பரவலாக நடத்தவெகுசன அமைப்புக்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றமை தெரிந்ததே. இவற்றின் வாயிலாக சிறிலங்கா அரசின் தமிழர் விரோதப் போக்கை சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்தவும் எம் உரிமைகளை சர்வதேச சமூகம் விளங்கிக்கொண்டு அதற்கேற்றவகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கும் பொருட்டுமே இவ்வாறான உணர்வெழுச்சிப்பேரணிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சப்பாத்து தொழிற்சாலைக்கு தீவைப்பு உரிமையாளர் வீட்டின் மீதும் தாக்குதல்!

- காத்தான்குடியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் தனியார் சப்பாத்து தொழிற்சாலை ஒன்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு தீவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொழிற்சாலை உரிமையாளரை அவரது வீட்டிற்குச் சென்று தேடிய துப்பாக்கிதாரிகள் அவர் இல்லை என்று தெரிய வந்ததும் வீட்டுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் காத்தான்குடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

காத்தான்குடி பொது மைதானத்திற்குச் செல்லும் சேர் அற்வக் கேற் அப்துல்காதர் வீதியில் உள்ள ஏ.எஸ்.எம்.ஜலாலில்(வயது-32) என்பவரின் சப்பாத்துத் தொழிற்சாலை இனந்தெரியாதவர்களினால் வெள்ளிக்கிழமை இரவு 12.45 இற்கும் 1.15இற்கும் இடைப்பட்ட நேரத்தில் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சப்பாத்து தொழிற்சாலை உரிமையாளரின் வீட்டின் பின்புறக் கதவுகளை உடைத்து உள்நுழைந்தவர்கள் வீட்டின் உரிமையாளரின் மனைவியிடம் உரிமையாளரைக் கேட்டபோது அவர் வீட்டில் இல்லை வியாபாரத்திற்குச் சென்றுள்ளார். எனக் கூறியதை அடுத்து வீட்டின் மீது சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து விட்டுச் தப்பிச் சென்றுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி வசந்தஹேரத் தெரிவித்தார்.

இச்சம்பவத்தையடுத்து காத்தான்குடியில் பரபரப்பு ஏற்பட்டு பெரும் திரளான மக்கள் சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர். இத்தொழிற்சாலையில் 19 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்துள்ளதாக காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இத்தொழிற்சாலையில் 15 தொழிலாளர்கள் கடமை புரிந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளையும் காத்தான்குடிப் பொலிசார் மேற் கொண்டு வருகின்றனர்.

வவுணதீவில் போரினால் பாதிப்புற்றோரின் சுயதொழில் முயற்சிக்கு நிதியுதவி

(நமது நிருபர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையில் வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கரடியனாற்றில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டக் காப்பகப் பொறுப்பாளர் ஐங்கரன் தலைமையில் காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, மாவட்ட தலைமைச் செயலகப் பொறுப்பாளர் சுரேஸ், சமூகப் பொருளாதார அபிவிருத்தி வங்கி முகாமையாளர் கிரேஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவாக 66 குடும்பங்களுக்கு தலா எண்பதாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

148 தற்காலிக வீடுகள் மக்களிடம் கையளிப்பு

(திருமலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்றுக்கல்லடிக் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் 148 தற்காலிக வீடுகளும், குடும்பத் தலைவரை இழந்த14 பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஐ.ஓ.எம்.நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி ஜீ.ஜீ.சீலி மற்றும் ஈச்சிலம்பற்று உதவிப் பிரதிநிதிச் செயலாளர் அ.உமா மகேஸ்வரன், மூதூர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காட்டுவிநாயகர் ஆலய வீதியில் காத்தவராயன் நாடக அரங்கு

(முள்ளியவளை)

முள்ளியவளை மேஜர் பசீலன் முத்தமிழ் கலாமன்றத்தினரால் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய வீதியில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் காத்தவராயன் நாடக அரங்கு நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த 18 ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு முள்ளியவளை தெற்கு கமக்கார அமைப்பு தலைவர் கா. யோகராசா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை மேஜர் பசீலனின் தாயார் ந. தங்கம்மா ஏற்றிவைக்க அகவணக்கம் இடம்பெற்று இன்றைய சமகால அரசியல் நெருக்கடி, கலை, கலாச்சாரம் தமிழ் இனத்தின் பாரம்பரியம் கனிந்து வரும் தேச விடுதலையை வென்றெடுக்க தலைமைக்கு உறுதுணையாக நிற்றல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய சிறப்பு கருத்துரையினை தமிழீழ திரைப்பட உருவாக்கப் பிரிவு பொறுப்பாளர் க. சங்கர் முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வு கழகத்தை சேர்ந்த நா. சந்திராதரன் ஆகியோர் நிகழ்த்தியதையடுத்து பு. நவநீதனின் நெறிப்படுத்தலில் காத்தவராயன் நாடகம் [illegible] சிறப்புற நடைபெற்றது. (ஆ)

கற்றலுக்கான வளநிலையம் பூநகரியில் திறந்து வைப்பு

(பூநகரி)

கிளி/செல்லையாதீவு அ.த.க பாடசாலையில் ஆக்கத்திறன் கண்காட்சியுடன் நூலகம் மற்றும் கற்றலுக்கான வள நிலையம் என்பன அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அதிபர் சு. திருநாவுக்கரசு தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதல்நிகழ்வாக மங்கல விளக்கை வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசாவும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி. மார்க்கண்டும் ஏற்ற, தேசியக் கொடியை கிளி/மாவட்டக்கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றினார். தொடர்ந்து நூலகத்தை வலயக்கல்விப்பணிப்பாளர் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

ஆக்கத்திறன் கண்காட்சியை பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மார்க்கண்டு நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

நன்றியுரையை நமதி பூ.ஜெயசீலன் வழங்கினார்.இந்நிகழ்வில் அயற்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (34)

புதிய முல்லைத்தீவு நகர் திட்டமிடல் குறித்து ஆராய்வு

(முல்லைத்தீவு)

சுனாமிக்கு பின்னரான திட்டத்தில் முல்லைத்தீவு நகரினை திட்டமிடுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைப்பீடத்தினர் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு நகருக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர்.

தமது திட்டத்தினை கணினியில் வடிவமைத்து முல்லைத்தீவு நகரை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காகவே வருகைதந்து முல்லை மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடினார்கள்.

தொடர்ந்து இந்தத் திட்டத்தினை கிளிநொச்சியில் தமிழீழ நிர்வாக சேவையினருடன் கலந்துரையாடி ஏதாவது மாற்றம் இருந்தால் திரும்பவும் தயாரிப்போம் எனக்கூறி சென்றனர். இந்தக் குழுவில் நகர அபிவிருத்தி அதிகார சபைத்தலைவர் வித்தியாஜோதி கமனுசில்வா, உதவிப் பணிப்பாளர் என். ராஜநாயகம், பணிப்பாளர் யூ.டி.ஏ., கே.வி.தர்மசிறி, கட்டட கலைஞர் வித்யாஜோதி அஸ்லே வோஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (20)

ஐந்து ஈழத்தமிழர் தாயகம் திரும்பினர்

இந்தியாவிலிருந்து மேலும் ஐந்து இலங்கைத் தமிழ் அகதிகள் கடந்த வியாழனன்று இராமேஸ்வரத்திலிருந்து தாழ்வுப்பாடு கடல்வழியாக தாயகம் திரும்பியுள்ளனர். தாழ்வுப்பாட்டுத் திட்டியில் இறங்கிய இவர்கள் தாழ்வுப்பாட்டுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

தாழ்வுப்பாட்டு பொலிசாரால் இவர்கள் மன்னார்ப் பதில் நீதிபதி முன்னர் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். பதில் நீதிபதி அவர்களின் சொந்த இடமான நானாட்டான் மாரியம்மன் கோவிலடி, அடம்பன் ஆகிய இடங்களிற்கு கிராம உத்தியோகத்தர்கள் மூலம் அனுப்பிவைத்தார். (18)

சமூக வலுவூட்டாளர்களுக்கு கிளிநொச்சியில் பயிற்சிப்பட்டறை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக வலுவூட்டல் பிரிவினால் சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

சமூக வலுவூட்டாளர்களுக்கான
பட்டறை
RESIDENTAL
OF TRAINERS FOR
TION
2005
2005 7 23

(படங்கள்- சோதி)

கிளிநொச்சி கனகபுரத்தில் அமையப்பெற்றுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பயிற்சிக் கல் லூரியில் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமான இந் தப் பயிற்சிப்பட்டறை சமூக வலுவூட்டல் பிரிவின் பணிப்பாளர் .இ.ம.செல்வராசா தலைமையில் இடம்பெற்றது..

மங்கல விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பமான இந்த முதற்கட்டப் பயிற்சிப்புட்டறையில் ஆண்கள், பெண்களென மொத்தம் 17 சமூக வலுவூட்டலாளர்கள் பயிற்சிகளைப் பெறுவதற்காக சமூகமளித்திருந்தனர். பயிற்சிநெறிகள் தொடங்கப்படுவதற்கு முன்பாக செல்வராசா அவர்களின் தலைமையுரை இடம்பெற்றது. பயிற்சிப்பட்டறையின் நோக்கம் பற்றியும் அதன் பயனாக சமூகத்தில் ஏற்படப்போகின்ற பயன் பாட்டுவிளைவுகள் பற்றியும் அவர் விரிவாக எடுத்துவிளக்கியிருந்ததையடுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இரவிச்சந்திரன் உரைநிகழ்த்துகையில் சமூக வலுவூட்டாளர்கள் மக்கள் மத்தியில் பணியாற்றவேண்டியதன் தேவைகள் குறித்தும், அவற்றின் முக்கியத்துவம் குறித்தும், மக்களிடத்தில் கையாளவேண்டிய அணுகுமுறைகள் குறித்தும் தெளிவாக எடுத்துவிளக்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி கருத்துரை வழங்கினார். அவரது கருத்துரையானது பயிலுனர்களுக்கான பிரதான அறிவுரைகளைக் கொண்டிருந்தது. இதனைத் தொடர்ந்து உரையாற்றிய சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட சமூக வலுவூட்டாளர் செல்வி ரூபா அவர்களின் கருத்துக்கள் சமுகப் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலைகளையும், அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கமைவாகப் பணியாற்றவேண்டியதன் தேவைகளைப் பிரதிபலிப்பதாகவும், அவர் ஆற்றிய பணிகளுக்கூடாகப் பெற்றிருந்த அனுபவத்தின்வாயிலாகக் கற்றறிந்து கொண்டவற்றையும் வெளிப்படுத்துவதுமாக அமைந்தது. அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் பயிலுனர்களுக்கு அவர்கள் ஆற்றப்போகின்ற பணிகளைப்பொறுத்து ஊக்கமளிப்பதாகவே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து சமூக வலுவூட்டல் பிரிவின் ஆலோசகரும் பயிற்றுனருமான திருமதி.ரஜனி இக்பாலின்கருத்துரையுடன் பயிலுனர்களுக்கான ஆரம்பப் பயிற்சிவகுப்புக்களையும் அவரே ஆரம்பித்தார். (சோ)

யாழ்ப்பாணம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களிற்கான புனர்வாழ்வு நடவடிக்கை துரிதப்படுத்தப்படுவது அவசியம்

-யாழ்.அரசாங்க அதிபர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளைத துரிதப்படுத்தப்படுவது அவசியம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக சகல துறைசார் அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் விரைந்து சேவையாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கினை மீளக்கட்டி எழுப்புவது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்திலேயே அரச அதிபர் கணேஷ் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கூட்டம் கடந்த வெள்ளியன்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இதில் சுனாமி மீள் கட்டுமான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளும் உதவும் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வீடமைப்பு, போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் விநியோகம், கல்வி, சமூக அமைப்புக்கள் என்பனவற்றை மீளக் கட்டியெழுப்புவது பற்றி இதில் முக்கியமாக ஆராயப்பட்டது. (33)

775 ஆம் இலக்க பேருந்து சேவை 5 வருடங்களின் பின் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் சங்கானை தொடக்கம் சாவகச்சேரி வரையான 775 ஆம் இலக்க பேருந்துச் சேவை ஐந்து வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சங்கானையில் இருந்து சுன்னாகம் மற்றும் புத்தூர் ஊடாக சாவகச்சேரி வரையில் வடபிராந்திய போக்குவரத்துச்சபையால் நீண்டகாலமாக நடத்தப்பட்டுவந்த 775 ஆம் இலக்க பேருந்துச்சேவை இராணுவ கெடுபிடிகள் காரணமாக 2000 ஆம் ஆண்டுடன் இடைநிறுத்தப்பட்டிருந்ததால் பொது மக்களும், உத்தியோகத்தர்களும் பெரும் பாதிப்படைந்தனர்.

இதனால் பொதுமக்கள் விடுத்துவந்த தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு இணங்க இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இப் போக்குவரத்துச்சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் எஸ்.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். இச்சேவை காலை,மாலை,மதியம் என மூன்று தடவைகளாக மொத்தம் ஆறு சேவைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் கூறினார். (33)

வலிகாமம் பாடசாலைகளில் தளபாடப்பற்றாக்குறை

-வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கல்விவலயத்தில் இருக்கின்ற 90 வீதமான பாடசாலைகளில் தளபாடப்பற்றாக்குறை நிலவிவருவதாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

இதனால் வலிகாமம் பிரதேசத்திலிருக்கின்ற அதிகளவிலான பாடசாலைகளின் கல்விச்செயற்பாடுகள் பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயம் கடந்த காலயுத்த அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு பெரும் வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றன.

இதில் தளபாடப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது. இங்கு நிலவுகின்ற தளபாடப்பற்றாக் குறைகளால் மாணவர்கள் தரைகளில் அமர்ந்தே தம்கல்வியைத் தொடர வேண்டியுள்ளது.

இது மாணவர்கள் மத்தியில் மனவிரக்தியை ஏற்படுத்தியிருப்பதால் இவர்களின் கல்வி எதிர்காலம் பாதிக்கப்படுவதாகவும் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறினார். (33)

யாழ்.இல் இறுவட்டு நூலகம் அமைக்க

மாநகரசபை ஆணையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இறுவட்டு நூலகம் ஒன்றை நிறுவுவதற்குத் தேவையான ஒருதொகுதி இறுவட்டுக்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ள தாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க. குணராஜா கூறியுள்ளார்.

யாழ்.மாநகரசபையால் நிர்வகிக்கப்பட்டுவரும் யாழ். பொதுநூலகத்துடன் இணைந்ததாக அமைக்கப்படவுள்ள இந்த இறுவட்டு நூலகத்தினை ஏற்பாடு செய்வதற்கு யுனெஸ்கோ நிறுவனம் 1.4 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இதில் முதற்கட்டமாக இறுவட்டு நூலகத்துக்கான ஒரு தொகுதி இறுவட்டுக்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் தமிழர் கலைகலாச்சாரத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும் சித்தரிக்கும் இறுவட்டுக்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவை இந்தியாவில் இருந்து விசேடமாக தயாரிக்கப்பட்டு தருவிக்கப்பட்டுள்ளதாகவும் குணராஜா கூறினார். (33)

படையினரின் ஆக்கிரமிப்பால் முந்திரிகைச் செய்கை யாழ்.குடாநாட்டில் பாரிய வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் படையினரின் ஆக்கிரமிப்பினால் முந்திரிகைப் பயிர்ச்செய்கை பாரிய வீழ்ச்சிகண்டிருப்பதாக யாழ். மாவட்ட விவசாய திணைக்களத்தின் விவசாய உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையிலேயே மலைநாட்டு முந்திரிகைப்பழத்திற்கு ஈடானதாக யாழ் குடாநாட்டு முந்திரிகைக்கு சந்தைமதிப்புக்காணப்பட்டுவந்தது. இதனால் யாழ். குடாநாட்டு விவசாயிகள் அதிகளவானோர் இம்முந்திரிகைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

யாழ்குடாநாட்டில் குறிப்பாக வலிகாமம் வடக்குப்பகுதியில் இம்முந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கு உகந்த பௌதிகவளங்கள் காணப்பட்டன. இதனால் உற்பத்தியின் அளவும்அப் பகுதிகளிலேயே அதிகம் காணப்பட்டன.

எனினும் வலிகாமம் வடக்கில் உள்ள விளைநிலங்கள் பலவும் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக முடக்கப்பட்டிருப்பதாலும் ஏனையபகுதிகளில் இருந்த முந்திரிகைச் செய்கைக்கு உகந்த விளை நிலங்களில் படையினர் கண்ணி வெடிகளைப்புதைத்து வைத்திருப்பதினாலும் யாழ்.குடாநாட்டின் முந்திரிகைச் செய்கை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (33)

மிருசுவில் படுகொலை வழக்கு மீண்டும் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மிருசுவிலில் சிறுவன் உட்பட ஏழு பேரை படையினர் கொலை செய்த வழக்கு விசாரணை மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதற்காக பிரதம நீதியரசர் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்துள்ளார். 2000ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி தமது வீடுகளைப்பார்க்கச் சென்ற இவர்களை இராணுவத்தினர் படுகொலை செய்து மலக்குழி ஒன்றில் வீசினர். இந்த வழக்கு 2003 ஆம் ஆண்டு நவம்பர் வரை நடத்தப்பட்ட போதும் பின்னர் இடைநடுவில் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (32)

அளவெட்டி மத்தியில் மிதிவெடி அகற்றும் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். அளவெட்டி மத்திப் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட பிரதேசத்தில் இருக்கும் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக் கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மிதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளை ஹலோட்ரெஸ்ட்" அமைப்பினர் மேற்கொண்டுவருகின்றனர்.

அளவெட்டி மத்தியில் இருக்கும் பலபிரதேசங்களை படையினர் மக்களின் மீள் குடியமர்வு மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு அனுமதித்துள்ளபோதும் அங்கு அவர்களால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றவில்லை.

இதனால் அங்கு பொதுமக்கள் மீளக்குடியமரவோ அல்லது விவசாயம் செய்யவோ முடியாத நிலை காணப்பட்டது.

இதனைக் கவனத்தில்கொண்டு மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத்தொடர்ந்தே இப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. (33)

வரணி ஆட்லறி தளத்தில் கனரக ஆயுதங்கள் குவிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான இராணுவ கட்டளைத்தளமாகக் கருதப்படும் வரணி பிரதான ஆட்லறி தளத்துக்கு கனரக ஆயுதங்கள், கனரக வாகனங்கள், துருப்புக்காவிகள் அதிகளவில் கொண்டுவரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளன. படையினருக்கான பயிற்சிகளும் அதிகரித்து இருப்பதுடன் கனரக ஆயுதங்களின் உள்ளிருப்பு நிலைகளும் கடந்த ஒரு வாரமாக இரவு பகலாக பலப்படுத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மற்றும் வரணி பிரதான சாலையூடாக ஏனைய பிரதேசங்களுக்குச் செல்வோரும் விசேட புலனாய்வுப்பிரிவின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (28)

யாழ்.இல் நிலை கொண்டுள்ள சிங்களப்படைகள் விரைவில் அங்கிருந்து அகற்றப்படுவார்கள்

–நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் குடிகொண்டிருக்கின்ற சிங்களப் படைகள் மிகவிரைவில் எமது மண்ணைவிட்டு அகற்றப்படுவார்கள் என யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் லெப். செல்லக்கிளி அம்மானின் 22ஆவது ஆண்டு நினைவு நாளில் மாலை 6.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்ற அங்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; தற்போது நடைமுறையில் இருந்து வரும் சமாதான சூழலை குழப்புவதற்கு சிங்கப் பேரினவாதம் பல்வேறு முயற்சிகளை எடுத்து போரைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலைமையை எமது மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்.

சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் இனம் இல்லாது அழிக்கப்படவேண்டுமென எம்மீது நிழல் யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கின்றன. தமிழர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. அத்தோடு எமது பூர்வீக பிரதேசங்களில் புத்தர்சிலையைக் கொண்டுவந்து நிறுத்திவட்டு இது சிங்களவர்க்குச் சொந்தமான இடமென சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள்.

இன்று யாழ்ப்பாணத்தில் கீரிமலை, கந்தரோடை, வல்வெட்டித்துறை போன்ற பல இடங்களில் பௌத்த விகாரைகள் கட்டுவதற்கு பௌத்த பேரினவாதம் முயனறு கொண்டு இருக்கின்றது. இதனைவிட உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்ற எமது மக்களின் வீடுகளில் கூட புத்தர்சிலையை வழிபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தொடர்ச்சியாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் சிங்களப் பேரினவாத இராணுவத்தினரை குடிகொள்ள விடுவோமேயானால் தமிழர்களின் பூர்வீக பிரதேசங்களை சிங்களப் பிரதேசமாக மாற்றுவார்கள்.

இந்த நிலைமையை எமது மக்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது போராட்டம் தனி அமைப்பு ரீதியான போராட்டமாக அன்றி ஓர் நாட்டுக்குரிய பாரிய படைக் கட்டுமானம் கொண்ட ஓர் போராட்டமாக சர்வதேச சக்திகள் வியந்துநிற்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கின்ற போராட்டம். எமது தேசியத்தலைவரின் சிந்தனைக்கு செயல் வடிவம்கொடுப்பதற்கு எமது மக்களும், போராளிகளும் தயாராக இருக்கின்றார்கள்.

சமாதான காலத்திலும், யுத்தகாலம் போன்று எமது போராளிகளும், மக்களும் சிங்களப் பேரினவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை தொடர்ந்து செல்வதனைப் பொறுமையாக இருந்து இனியும் எம்மால் அனுமதிக்க முடியாது என்றார். (41)

சாவகச்சேரி நகர மருத்துவமனையை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர மருத்துவமனையை புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி ஐந்து கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக நகர மருத்துவமனை வைத்திய அதிகாரி அம்பிகைபாகன் தெரிவிக்கின்றார். மற்றும் இத் திட்டத்தை விரைவுபடுத்தி செயற்படுத்தவும், சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும், நிறுவனங்களையும் தான் கோரியிருப்பதாகவும், இதனூடாக இப் பிரதேச மக்கள் அனைத்து மருத்துவ சிகிச்சைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள வழி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (28)

தயா சந்தகிரியின் மோசடியும் சிறிலங்கா கடற்படையின் நிலையும்

கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற அவசர சந்திப்பின் போது சிறிலங்காவின் முப்படைத்தளபதிகளிடமும்;ஆயுதக் கொள்வனவை உடனடியாக அமுலுக்குவரும் வண்ணம் நிறுத்துமாறு சனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார். நிதிப்பற்றாக்குறை காரணமாக தற்போது முன்னர் வழங்கப்பட்ட கட்டளைகளின் அடிப்படையில் மட்டுமே ஆயுதங்கள் கொள்வனவு செய்ய இடமளிக்கப்படும் என்றும் நீண்டகால தேவைகள் பின்னர் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த சந்திப்பின் போது ஆயுதக் கொள்வனவுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவரும் இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத்தளபதி எயாமார்ஷல் டொனால்ட்பெரேரா ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

நாட்டின் பொருளாதார கஷ்ரங்களுக்கு மத்தியில் முப்படைகளுக்கு ஆயுதங்கள் தேவைப்படுவது பற்றி இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது. பாதுகாப்பு பிரிவில் முக்கிய .நிறுவனமான இராணுவத்தலைமையகம் மீண்டுவரும் செலவீனம் பற்றியே குறிப்பிட்டுள்ளது. விடுதலைப்புலிகளிடம் விமானங்கள் இருப்பதால் அதற்கு முகம் கொடுக்கும் வகையில் இராணுவம் தேவையான ஆயுதங்களைப் பெற்றுத் தருமாறு கோரிவருகின்றது. எனினும் கடற்படையினர் கோரியிருக்கும் ஆயுதங்கள் யாரும் சிலையாகிப் போகும் அளவிலான கோடிக் கணக்கான பெறுமதி வாய்ந்தவையாகும். முன்னாள் பாதுகாப்பு செயலரான சந்திரானந்த டி சில்வா தலைமையிலான ஆயுதக் கொள்வனவு குழுவின் அறிக்கை இராணுவத்தினரின் சில சிபார்சுகள் மதிப்பிட முடியாதவை எனக்குறிப்பிடுகிறது. அது நாட்டின் பொருளாதார ரீதியாக நன்மையளிக்கக் கூடியதாகவுமில்லை.

குறிப்பிடத்தக்க இந்த நிதிப் பற்றாக்குறை நிலையில் அப்போது வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி பிரிட்டனிடமிருந்து " கலகட்" என்ற போர்க்கப்பலை கொள்வனவு செய்யுமாறு கோரியிருந்தமை விசேட அம்சமாகும். அதுமட்டுமன்றி கடற்படையின் கோரிக்கைகள் மேலும் பல காணப்பட்டன. அதனால் ஆயுதக் கொள்வனவில் பாரிய மோசடிகள் ஏற்பட்டு நாட்டுக்கு ஒரு அபகீர்த்தியுண்டானது.

1997 ஆம் ஆண்டு பிரிட்டனின் 'றோயல் ஓர்டினன்ஸ்' நிறுவனத்திடமிருந்து ஓர்லிகன் வகையைச் சேர்ந்த பத்துப் பீரங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் பெறுமதி ரூபா எழுபது கோடியே 39 இலட்சம் ஆகும். இவை தரையிலும் விமானத்திலிருந்தும் பிரயோகிக்கக் கூடியவையாகும். இவற்றில் ஒன்பது கப்பல்களில் பொருத்தப்பட்டன ஒன்று திருகோணமலை கடற்படைத் தளத்தில் பொருத்தப்பட்டது. எனினும் அது செயற்திறன் குறைவடைந்ததால பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக மேற்படி நிறுவனத்துடன் முறுகல் நிலை காணப்படுகின்றது இதற்கு எழுத்து மூலசான்றுகளும் உள்ளன.

இவ்வாறான முரண்பாடுகள் காணப்பட்ட நிலையில் மீண்டும் 2000 ஆம் ஆண்டு மேலும் இரு பீரங்கிகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பீரங்கிகள் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட "சயுர" போர்க்கப்பலில் பொருத்துவதற்காகும் இந்தப் பீரங்கிகள் எதிரிகளை இனம்கண்டு தன்னியக்கம் மூலம் தாக்குதல் நடத்தக் கூடியதாகும். இதன் பெறுமதி 65 கோடியே 83 இலட்சத்து 66 ஆயிரத்து நூறு ரூபாவாகும். இதனைத் தெரிவு செய்யக்காரணம் இது நிமிடம் ஒன்றுக்கு 800 தடவைக்குமேல் தாக்குதல் நடத்தக்கூடிய திறன் பெற்றிருப்பதாகும்.

எனினும் கேள்விப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட இவ்வகை பீரங்கிகளை வழங்குவதற்கு பதிலாக வேறு பீரங்கிகளை வழங்க ஓர்டினன்ஸ் நிறுவனம் முயன்றது எனினும் இதனை அறிந்து கொண்ட ஆயுத ஆய்வுக் குழு வேறொரு புதிய கேள்விப்பத்திரத்தை தயாரிக்குமாறு பாதுகாப்பு அமைச்சைக் கோரியது.

எனினும் தயாசந்தகிரி இந்த பீரங்கிகள் மிக அவசியம் என்று தெரிவித்தார். எனினும் கடற்படை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுத் தலைவர் ரியர் அட்மிரல் வசந்ததென்னகோன் தலைமையிலான குழு இந்த கொள்வனவை மறுத்ததுடன், முன்னர் கொள்வனவு செய்த பத்துப் பீரங்கிகள் செயலிழந்துள்ள நிலையில் அதே நிறுவனத்திடம் கொள்வனவு செய்வதை நிறுத்தி வேறு நிறுவனத்திடம் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்குமாறும் சிபார்சு செய்தது. அந்த நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல்களை வைத்துக் கொள்ளவும் அதிருப்தி தெரிவித்தது. எனினும் இந்தியாவின் "சயுர" என்ற கப்பலில் இதனை பொருத்துவதனை வலியுறுத்தி சந்தகிரி கொள்வனவில் விடாப்பிடியாக இருந்தார். எனவே அப்போதைய ஐ.தே முன்னணி அரசிடம் இது சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி இந்த கேள்விப்பத்திரத்தை நீதியமைச்சின் செயலர் தாராவிஜயதிலக்க, பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, திறைசேரியின் பிரதிச் செயலர் திவாரத்ன ஆகியோரடங்கிய குழு பரிசீலனை செய்தது. அக்குழுவும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. பின்னர்.சந்தகிரி அப்போதைய பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பனவின் அனுமதியைப் பெற்றார்.

எனினும் பின்னர் யோசனை செய்த மாரப்பன அனுமதியை வாபஸ் பெற்றார்.

எனினும் தனது முயற்சியை கைவிடாத சந்தகிரி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் ஆரம்பித்தார்.

அவர் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரித்தானிய ஏரோ டிபென்ஸ் நிறுவனத்தின் ஒரு பிரிவான ஓர்டினன்ஸ் நிறுவனத்திடம் முன்னர் கொள்வனவு செய்த 30 மி.மீ பீரங்கிகளின் திருத்தம் எனத்தலைப்பிட்டு கடிதம் ஒன்றை அனுப்பினார். அக்கடிதத்தில் அவர் முன்னர் கொள்வனவு செய்த பீரங்கிகள் செயற்படாமை குறித்தும் இதனை உடனடியாக திருத்தித்தருமாறும் அதன் மூலம் தமது நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார். இதற்கு அந்நிறுவனம் உரிய பதிலை தெரிவிக்காத நிலையில் கடந்த டிசம்பரில் நான்கு பேர் அடங்கிய குழுவொன்றை பிரிட்டனுக்கு அனுப்பினார். அவர்கள் வேறு அலுவல்களுக்காக சென்ற சமயம் இந்த விவகாரம் பற்றியும் ஆராய்ந்தனர். எனினும் அந்நிறுவனம் மேற்படி பீரங்கிகள் நல்ல நிலையிலிருந்ததாகவே பரிந்துரை செய்தது. அத்துடன் சந்தகிரி கோரிய மேலும் இரண்டு பீரங்கிகளையும் கொள்வனவு செய்யவும் சிபார்சு செய்தது.

2001 ஆம் ஆண்டில் அட்மிரல் வசந்த கரன்னாகொடவும் மேற்படி பீரங்கிகள் தரம் குறைந்தவை என அனுபவ ரீதியாக தெரிவித்துள்ளார். ஆகவே மீண்டும் அதனைக் கொள்வனவு செய்வதில் பணத்தை வீண் விரயமாக்கக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அன்று தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழத் தலைவராக பணியாற்றிய இதேதளபதி தயாசந்தகிரி தனது அறிக்கையில் உந்துசக்தியினால் செயற்படும் 30 மி.மீ. பீரங்கிகளின் உந்துசக்தி பழுதடைந்திருப்பதாக தெரிவித்திருந்தார் என வசந்த கரன்னாகொட குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தெரிந்திருந்த போதும் கடற்படை தலைமையகத்தின் பணிப்பாளர் கடற்படை தளபதியிடம் தெரிவிக்கவில்லை. எனினும் இறுதியில் தான் இதனை தெரிவிக்க நேர்ந்ததாக கரன்னாகொட தெரிவித்துள்ளார். இதனால் அப்போது திட்டமிடப்பட்ட கொள்வனவு நிறுத்தப்பட்டது. ஆனால் அதே நிறுவனத்திடம் மீண்டும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சிப்பது அதிர்ச்சியளிக்கின்றது என கரன்னாகொட தெரிவிக்கிறார்.

எனினும் சந்திரிகாவின் அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர் புதிய அமைச்சரவை மூலம் கேள்விச் சபையொன்று நியமிக்கப்பட்டது. வெளிநாட்டமைச்சுச் செயலர் பலிககார தலைமையில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் அசோக ஜயவர்தன, திறைசேரி பிரதிச் செயலர் திவாரத்ன ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினருடன் கடந்த ஏப்ரல் ஏழாம் திகதி சந்திப்பொன்றை நடத்தியபோது தேவைப்படும் இரண்டு பீரங்கிகளுக் கான விபரத்தை சந்தகிரி குறிப்பிட்டார். அவை சிபார்சு செய்யப்பட்டன. அவை மிகவிரைவில் கொள்வனவு செய்யப்படவேண்டும் என்றும் கோரப்பட்டது,

திருமலையில் சந்தகிரி

அதற்கேற்ப 30 மி.மீ பீரங்கிகள் திருத்தப்பட்டிருப்பதாகவும் அவை திருப்தி கரமானதாக செயற்படுவதாகவும் தற்போது கப்பல்களில் பொருத்தப்பட்டுள்ள பழுதான பீரங்கிகளுக்குப் பதிலாக புதியவை பொருத்தப்படலாம் என்றும் சிபார்சு செய்ததுடன் ரட்மெக் நிறுவனத்திடம் கொள்வனவு செய்வதாயின் ஆயுதப்படை அதிகாரிகள் குழுவொன்றைஅனுப்பி நிலைமையை ஆராயவேண்டும் என்றும் தெரிவித்தது. ரட்மெக் நிறுவனத்திடம் முன்பு கேள்வி கோரப்பட்டபோது அதற்கான கேள்வி 26 இலட்சத்து 32 ஆயிரத்து 440 ரூபாவாக காணப்பட்டது. தற்போது அது 37 இலட்சத்து 62 ஆயிரத்து 93 ரூபாவாகவுள்ளது. எனினும் இந்த தாமதத்துக்கு அமைச்சரவை பொறுப்பல்ல என்றும் தெரிவித்துள்ளது. இந்த அதிகரிப்புடன் கொள்வனவு செய்ய அமைச்சரவை நியமித்த குழு பின்னடிக்கின்றது.

இது தொடர்பாக சந்தகிரி மேற்படி நிறுவனத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இணங்கியபடி பழுதான ஆயுதங்களுக்குப் பதிலாக புதிய ஆயுதங்களை பெறுதல் தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு வருமாறு நிறுவனத்திடம் கோரினர்.. அதன்படி இங்கு வந்த குழுவினரிடம் பேச்சுக்கள் நடைபெற்றன. அப்போது தற்போதைய விலையில் ஐந்து சதவீதத்தைக் குறைக்க இணக்கம் காணப்பட்டது. இதன்போது ஓர்டினன்ஸ் நிறுவனம் கலந்து கொள்ளவில்லை.

இவ்வாறு இழுபறிபட்ட ஆயுதக்கொள்வனவையே தற்போது சந்திரிகா திடீர் உத்தரவின் மூலம் இடைநிறுத்தியுள்ளார். இந்தக் கொள்வனவு தொடர்பாக நிறையப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. சந்தகிரி இந்த இரு பீரங்கிகளையும் கொள்வனவு செய்யுமாறு இரு அரசாங்கங்களையும் வற்புறுத்தியது ஏன் என்ற கேள்வி பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. உலகில் வேறு உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து சந்தகிரிக்கு ஆயுதம் கொள்வனவு செய்யமுடியாது போய் விட்டதா? நட்மெக் நிறுவனத்திடம் மட்டும் ஐந்து வருடங்களாக போராடியது ஏன்? முன்னர் ஓர்டினன்சிடம் இருந்து கொள்வனவு செய்த பத்து பீரங்கிகளின் நிலை என்னவானது?

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்;அவற்றுள் ஒன்று மட்டுமே செயல்திறன் கொண்டிருப்பதாகவும் நான்கு ஓரளவு பயன்பாட்டில் இருப்பதாகவும் ஐந்து முற்றாக பயன்படுத்த முடியாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளார் அத்துடன் தற்போது ரோந்துப் பணிக்காக அவசரமாக பீரங்கிகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இக்பால் அத்தாஸ்
சண்டே டைம்ஸ்
தமிழில் வடிவேல்

எனவே இவ்வாறான பீரங்கிகள் கைவசம் இல்லாதுவிட்டால் கடற்படையினரின் நிலை கேள்விக் குறியாகி விடும் என்பது புலனாகும்.



சயுர

NORTH AMERICA
ARCTIC OCEAN
North Pole
Tropic of Capricorn

கடந்த வாரத்தில்

14.07.2005- -20.07.2005

14

☐தென்னாபிரிக்காவின் சோவிட்ட பிராந்தியத்திலுள்ள மெராபி ரயில்வே நிலையத்தில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 162 பேர் காயம்.

15

☐ ஆப்கான் ஆதிக்குடிகளின் தலைவர் மாலிக் அஹாதம் மால் கடத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

☐ வட கென்யாவில் பணியாற்றிய ரோமன் கத்தோலிக்க ஆயர் தலைநகரிலிருந்து 250 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வடநகரில் சுட்டுக்கொலை.

16

☐ ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து தெற்கே 70 கிலோமீற்றர் தூரத்திலுள்ள முஸ்ஸயிப் நகரில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 54பேர் பலியானதுடன் 84 பேர் காயமடைந்தனர்.



☐ ஆபிரிக்க கண்டத்திலுள்ள ஈக்வடோரியல் கினியாவில் விமானம் ஒன்று புறப்பட்ட சில நிமிடங்களில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 55 பேர் பலி.

☐ இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மூன்று நாள் பயணமாக அமெரிக்கா பயணம்.

☐ லண்டன் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக்கருதப்படும் எகிப்து இரசாயன நிபுணர் கைது.

☐ ஈராக் பிரதமர் இப்ராஹிம் அல்ஜபாரி ஈரானுக்கு விஜயம்.

☐ பிஷோசோ நாட்டின் தலைநகர் குன்யா பிஷோசோவில் சனாதிபதி மாளிகை மற்றும் உள துறை அமைச்சு அலுவலகம் ஆகியவற்றைச் சுற்றிவளைத்து 20 ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் இரு பொலிசார் பலி.

17

☐ ஸ்பெயினின் மத்திய பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயை அணைப்பதற்குச் சென்ற தீயணைப்புப் படையினரில் 25 பேர் தீயில் கருகிப் பலி.

☐ பிரிட்டனின் முன்னாள் பிரதமர் சர்எட்வர்ட் ஹீத் மரணம்.

18

☐ அமெரிக்காவின் மெக்சிக்கோ கடலில் சூறாவளி வீசியபோது மக்கள் பெரும் அவலம்.



☐ வியட்னாம் சனாதிபதி ட்ரான்டக் லூங் ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா பயணம்.

☐வடமேற்கு பாகிஸ்தானில் ஐந்து சிரேஷ்ட தலிபான் தலைவர்கள் பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவினரால் கைது.

19

☐ கோவையிலிருந்து சென்னை சென்ற புகையிரதத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் ஒருவர் பலி.



☐ ஆறு ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்ட முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில்கிளிங்டன் தென்னாபிரிக்கா வந்தடைந்தார்.

20

☐ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் எட்டுப்பேர் பலி.



☐ சீனாவின் வடமாகாணமான சாங்ஸியிலுள்ள நிலக்கரிச்சுரங்கத்திற்குள் எரிவாயு வெடித்ததில் 26 ஊழியர்கள் பலி.

☐தாய்வான் வடபகுதியை ஹெய்டாங் எனும் சூறாவளி தாக்கியதில் ஏழு பேர் பலி, 31 பேர் காயம்.

☐வடகொரியாவினதும், தென்கொரியாவினதும் இராணுவங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலான பேச்சுக்களை இரு நாடுகளினதும் இராணுவப் பிரதிநிதிகள் சியோல் நகரில் ஆரம்பித்தனர்.

☐இந்தியாவின் காஷ்மீர் மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரில் இடம்பெற்ற கார்க் குண்டுத்தாக்குதலில் எட்டுப் பேர் பலி.



யுத்தத்தை ஊக்குவிக்கும் வகையில் இராணுவத்தில் ஒருபகுதி செயற்படுகிறது

ஐ.தே.க.பா.உ ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

இராணுவத்தினுள் அரசியல் ஊடுருவல்கள் இருந்து வருவதாக சனாதிபதி கடந்த காலங்களில் தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளார்.அதன் காரணமாக சில இராணுவத்தினர் யுத்தத்தை ஊக்குவிக்கும் வகையிலான சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.மேஜர் ஜெனரல் ஹெந்தவிதாரண சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக யுத்தத்தை ஊக்குவித்து வந்தாரென குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார் என இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் [illegible]ந்த வி[illegible]வின் இடமாற்றம் குறித்து ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரட்ண தெரிவீத்துள்ளார்.

வட கிழக்கு பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான கொலைகள் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டு வந்தது. பாதுகாப்பு மட்டத்திலும் சனாதிபதி இந்தக் குற்றச்சாட்டை தெரிவித்து வந்தார்.அரசியலில் புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாடு இருப்பதாக தொடர்ந்து குற்றஞ் சாட்டப்பட்டு வந்தது.நாட்டு மக்களுக்கு யுத்தம் அவசியமாக இருப்பின் இப்படியான பிரச்சினைகள் இருந்தாலும் அதனால் பிரச்சினை இல்லை. ஆனால் ஆட்சியில் அமரும் அரசாங் கங்கள் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற காரணத்திற்காகவே தமது வாக்குகளை அளித்து. அரசாங்கத்தை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.ஆகவே சமாதானம் மிக அவசியமாகிறது.தமிழீழ விடுதலைப் புலிகள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக அரசாங்கமும் தவறு விட வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கம் சமாதானத்தைப் பேணுவது மிக அவசியம்.சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.இதன் அவசியத்தை உணர்ந்தே சனாதிபதி மேஜர் ஜெனரல் ஹெந்தவிதாரணவை பதவியில் இருந்து அகற்றியுள்ளார் என நான் நினைக்கிறேன் என்று கூறினார். (32)

உலக ஜனநாயக வாதிகள் சங்கம் அரசிடம் மன்னிப்புக்கோர வேண்டும்

அமைச்சர் மங்கள சமரவீர

உலக ஜனநாயக வாதிகளின் சங்கம் சிறிலங்கா அரசாங்கத்திடம் மன்னிப்பு கோரவேண்டும் எனஅமைச்சர் மங்கள சமரவீர கேட்டுள்ளார்.இந்த ஜனநாயக வாதிகள் தமது நாட்டு பிரச்சினையைத்தவிர்த்து இலங்கை நாட்டுப் பிரச்சினை பற்றி ஆராய்ந்திருப்பதானது 12 தடவைகள் தேர்தலில் தோல்வியுற்ற ரணில் விக்கிரமசிங்கவின் வலியுறுத்தலின் அடிப்படையிலேயே என அவர் தெரிவித்துள்ளார். 1983ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட உலக ஜனநாயகவாதிகளின் சங்கம் பழைமைவாதிகள் மற்றும் வலதுசாரி நாடுகள் அறுபதின் பிரதிநிதிகளை மாத்திரமே கொண்டமைந்தது எனக் குறிப்பிட்ட மங்கள சமரவீரஅதற்கு அவை சிறிலங்காவைப் பற்றிக் கதைப்பதற்கு அருகதை இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

சுனாமி பாதித்த பகுதிகளின் புனரமைப்பில் அம்பாந்தோட்டை முதலிடம் பெறுகிறது

-சிறிலங்கா பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை உதவி நிதியம் எனப்படும் நிதியம் குறித்து பல விதமான குற்றச்சாட்டுக்கள் பல தரப்பினராலும் தெரிவிக்கப்பட்ட பொழுதிலும், அதன் நடவடிக்கைகள் சீராக முன்னெடுத்துச் செல்லப்படுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் உள்ள வஜிரகிரி விகாரையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பொழுது, அம்பாந்தோட்டை உதவி நிதியம் குறித்து தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் அடிப்படை எதுவும் இல்லை என தெரிவித்தார்.சுனாமி கடற்சீற்றம் காரணமாக பாதிப்படைந்த ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் பொழுது, அம்பாந்தோட்டை பிரதேசமே அதிகளவில் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.சுனாமியினால் அழிந்து போன அம்பாந்தோட்டைப் பிரதேச வீடுகளில் மூன்றில் இரண்டு பங்கான வீடுகள் மீளக்கட்டி எழுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர்,சிறந்த முறையில் பணியாற்றும் இந்த அமைப்பிற்கு குந்தகம் ஏற்படும் வகையிலேயே இந்த பொய்க் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (32)

503 ஆங்கில ஆசிரியர்கள் ஒகஸ்ட் முதல் வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் நியமனம்

(திருமலை)

வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்க மாகாணக் கல்வி அமைச்சு 503 ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்படவிருக்கிறது. போட்டிப் பரீட்சை மூலம் தெரிவாகி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 300 பேருக்கும் ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களாகப் பணிபுரிந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 203 பேருக்கும் இப்புதிய நியமனம் வழங்கப்படவிருக்கிறது. ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் திருமலை கல்வியமைச்சில் நடைபெற இருப்பது தெரிந்ததே. 01.10.2000இற்கு முன்பு 180 நாட்கள் பணியாற்றிய ஒப்பந்த ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட விருக்கின்றனர். இவற்றில் பலர் தவறவிடப்பட்டிருப்பதாகத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. இது தொடர்பாக செயலாளர் த.மகாசிவம் கல்வியமைச்சுடன் கலந்துரையாடியுள்ளார்.

கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

சிவபாலசுந்தரம் சிறீகாந்தன் மாமுனை செம்பியன் பற்று வடக்கு தாளையடி தே.அ.அட்டை இல. 823234660V, வேல்விநாயகம் நகுலேஸ்வரன் மாமுனை தாளையடி தே.அ. அட்டை இல் 691131203V, முருகப்பர் சின்னக்குட்டி செம்பியன்பற்று தாளையடி தே.அ. அட்டை இல. 832790010V மற்றும் தங்ககுலசிங்கம் திலகேஸ்வரி, சிவபாலசுந்தரம் சிறீகாந்தன் ஆகியோரது பயண அனுமதி அட்டைகள் என்பன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் சமூகம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். (சோ)

பொது நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சந்திரிகா -ரணில் சந்திப்பு

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஓரிரு நாட்களில் விசேட சந்திப்பு நடைபெறவுள்ளதாக சனாதிபதி மாளிகை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையேபொதுவானஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கான இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவிற்கும் சனாதிபதிக்கும் இடையே நடந்த சந்திப்பில் எடுக்கப்பட்ட முடிவின் படியே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாக ஐ.தே.க.வட்டாரங்கள் தெரிவித்தன.

சனாதிபதியின் அழைப்பீன் பேரில் சனாதிபதி மாளிகைக்குச் சென்ற ஐ.தே.க.தவிசாளர் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்திருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின.

அடுத்த சனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டிற்குள் நடத்தப்பட வேண்டும் என்பது தமது கட்சியின் கடும் நிலைப்பாடென்றும், அதில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்த தமது கட்சி தயாராக இல்லை என்றும், இந்தச் சந்திப்பின் போது சந்திரிகாவிடம் மலிக் சமரவிக்கிரம வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிகிறது.

இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீட்டை சிங்களவர் விரும்புவதாகக் கருத்துக் கணிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வேயின் அனுசரணையை சிங்களவர்கள் புறக்கணிப்பதாகவும், இந்தியத் தலையீட்டையே விரும்புவதாகவும் சிறிலங்காவின் நிறுவனம் ஒன்று கருத்துக் கணிப்பு வெளியிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இது தொடர்பாக வெளியிட்ட கருத்துக் கணிப்பில் இந்தியத் தலையீட்டை 47.5 வீத சிங்களவர்களும்,18.2வீத தமிழீழத்தமிழர்களும், ,31.3 வீத மலையகத் தமிழர்களும் விரும்புகின்றனர். இந்தியாவுக்கான மொத்த ஆதரவு 41 வீதமாகும்.

ஆனால் 66.5 வீத தமிழீழத் தமிழர்களும், 62.2 வீத மலையகத் தமிழர்களும் நோர்வேயின் அனுசரணையையே ஆதரிக்கின்றனர்.

கடந்த மூன்று மாதங்களில் நோர்வேக்கான ஆதரவு விலகி இந்தியாவை நம்பும் நிலையில் முஸ்லிம் மக்கள் இருக்கின்றனர்.

கடந்த மார்ச் மாதம் இந்தியாவுக்கான முஸ்லிம்களின் ஆதரவு 27.5 வீதமாக இருந்தது. இது யூனில் 40 வீதமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் மார்ச் மாதம் நோர்வேக்கு ஆதரவாக 52.5 வீதமாக இருந்தது. தற்போது 33.4 வீதமாக உள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபையானது அமைதிப் பேச்சுக்களுக்கு உதவியாக இருக்கும் என்று 82 வீத தமிழீழத் தமிழர்களும், 87.4 வீத மலையகத் தமிழர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவை அனுசரணையாக ஏற்றுக்கொள்ள 30.6 வீத சிங்களவர்களும், 12.1 வீதத்தினர் ஜப்பானுக்கும் ஆதரவாக உள்ளனர்.

11 வீத முஸ்லிம்களும், ஆறு வீத தமிழீழத் தமிழர்களும், 1.5 வீத மலையகத் தமிழர்களும் ஜப்பானுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் வாழ்க்கை வரலாற்று நூல் எங்கே?

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகம் எங்கே என கொழும்பு ஆங்கில ஊடகம் கேள்வியெழுப்பியுள்ளது. பிரித்தானிய எழுத்தாளர் கிரமிவில்சன் எழுதிய சனாதிபதியின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகமொன்று இந்த மாதம் 17ஆம் திகதி வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தப் புத்தகம் இன்னமும் வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் சனாதிபதியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் இந்தப் புத்தகத்துக்கு என்ன நடந்ததென கொழும்பு ஆங்கில ஊடகமொன்று கேள்வியெழுப்பியுள்ளது. இந்தப் புத்தகம் இம்மாதம் 17ஆம் திகதி கொழும்பிலும், அதனைத் தொடர்ந்து ஒஸ்லோ, நியூயோர்க், வோஷிங்டன், மொன்டெரல், பேர்லின் போன்ற இடங்களில் வெளியிடப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் புத்தகம் தொடர்பான விடயங்களை அமைச்சர் மங்கள சமரவீரவே கையாண்டு வருவதாகவும், இதனால் தனக்கு இந்தப் புத்தகம் தொடர்பாக எதுவும் தெரியாதெனவும் சனாதிபதியின் ஊடகத் துறைப் பணிப்பாளர் எரிக் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் சட்டமா அதிபரால் நிராகரிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பது தொடர்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை சட்டமா அதிபர் நிராகரித்துள்ளார். மேல் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் யாரென்பது தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு மேல் மாகாணசபைத் தலைவர், சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும், மாகாணசபைத் தலைவரின் கோரிக்கையை சட்டமா அதிபர் நிராகரித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேல் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் தொடர்பாக ஜே.வி.பியின் குற்றச்சாட்டுத் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படுமென கடந்த மாகாணசபைக் கூட்டத்தில் மேல் மாகாணசபைத் தலைவர் ஜெகத் அணாககே அறிவித்திருந்தார். எனினும், சட்டமா அதிபர் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ள நிலையில், அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி கூடவுள்ள அடுத்த மாகாண சபைக் கூட்டத்தொடருக்கு முன்னர், எதிர்க்கட்சித் தலைவர் யாரென்பதை சபைத்தலைவர் அறிவிக்க வேண்டுமென ஜே.வி.பியின் மேல் மாகாணசபைத் தலைவர் வர்னடீப்தி ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

கிரி ஓயா வீதியில் வாகன விபத்து 13 பேர் படுகாயம்; எண்மர் கவலைக்கிடம்

(கொழும்பு))

கிரியோயா - கிரிபத்த வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம் பெற்ற வாகன விபத்தில் பதின்மூன்று பேர் காயமடைந்துள்ளனர். தனியார் பேருந்துகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதிய போதே விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் பொலநறுவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் எட்டுப் பேரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த வாகன விபத்துத் தொடர்பாகப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொ.ஐ.மு தலைவர்கள்- சந்திரிகா விரைவில் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து உரையாடவுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் கூடி அரசியல் நிலவரங்களை ஆராய்வதென்றும் அதற்கமைய எடுக்க வேண்டிய செயற்பாடுகள் என்ன என்பது பற்றி சனாதிபதிக்கு தெரியப்படுத்தவுள்ளதாகவும் பொ.ஐ முன்னணியின் பொதுச் செயலாளர் தி.மு ஜயரத்ன கூறினார்.

பாத யாத்திரிகர்களுக்கு பன்றியும், யானையும் தொல்லை

இம்முறை கால் நடையாக கதிர்காமத்திற்கு கானகத்ினூடாகச் சென்ற பக்தர்களுக்கு யானை, கரடி, பன்றி போன்ற மிருகங்கள் ஆங்காங்கே தொல்லை கொடுத்ததாகக் கூறப் படுகிறது. கரடி குதறியதில் அக்கரைப்பற்று, காரைதீவு பக்தர்கள் படுகாய முற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று கோட்டைக்கல்லாறு பக்தர் ஒருவர் காலைக் கடன் முடிக்க பற்றைக்குள் சென்ற வேளை அங்கு குட்டிகளுடன் இருந்த பன்றி கோபமுற்று அவரை வெட்டிக் காயப்படுத்தியுள்ளது.

கட்டகாமப் பகுதியில் தனியன் யானை ஒன்று எதிரில் படும் பக்தர்களின் மூட்டை முடிச்சுக்களை பறித்துக் கொண்டு போகிறது. சிறுமியொருத்தி கொண்டு சென்ற பொதியையும் லாவகமாகப் பறித்துக் கொண்டு சென்றுள்ளது.

சிவராம் கொலை தடயப் பொருட்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைப்பு

ஊடகவியலாளர் சிவராமின் கொலை தொடர்பான தடயப் பொருட்கள் அனைத்தும் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடுவெல நீதி மன்றத்தால் இவை அனுப்பப்பட்டுள்ளன.

சிவராம் கொலை செய்யப்பட்ட இடத்தில் கிடந்த துப்பாக்கி ரவைகள் மற்றும் ஆயுதம் என்பனவே அனுப்பப்பட்டவையாகும். இதே வேளை இந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

வற்வரி நீக்கப்பட்டிருப்பினும் டீசல் விலையில் மாற்றமில்லை

பெற்றோலியக்கூட்டுத்தாபனம் அறிவிப்பு

(கொழும்பு)

டீசலுக்கான வற்வரியான15 சதவீதத்தை அமைச்சரவை அகற்றியுள்ள பொழுதிலும், டீசல் விலை குறைவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலியா மெதகம தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரித்த நிலையில் அரசாங்கம் எதிர்கொள்ளும் செலவினம் மேலும்அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. தற்சமயம் டீசல் லீற்றரின் விலை 50ரூபா விற்கு விற்பனை செய்யப்படுகின்றது. வற்வரி குறைக்கப்படாமல் இருந்தால் டீசல் விலை லீற்றருக்கு 55 ரூபாவாக உயர்த்தப்படுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை பெற்றோல் கூட்டுத்தாபனம் எடுக்க வேண்டி வந்திருக்கும். இப் பொழுது வற்வரி அகற்றப்பட்டுள்ளதால் டீசலின் விலையை குறைக்கவோ அல்லது கூட்டவோ அவசியம் இல்லை.இதன் அடிப்படையில் பழைய விலையாகிய 50 ரூபாவிற்கே நாம் விற்பனை செய்யமுடிவு எடுத்துள்ளோம். (32)

28 பணிப்பெண்கள் சவுதியிலிருந்து திரும்பினர்

(கொழும்பு)

சவுதிக்கு பணிகளுக்காகச் சென்ற 28 இலங்கைப் பணிப்பெண்கள் நேற்றுமுன்தினம் இடைநடுவில் நாடு திரும்பியுள்ளனர். உரிய வேதனம் இன்மை மற்றும் இம்சை என்பன வற்றை அடுத்து சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் அடைக்கலம் கோரிய நிலையில் அங்கிருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளார்கள்.

Immediate Vacancy Norwegian People's Aid **solidar** An INGO consortium including

Tsunami Education Project: Facilitator

Applications are requested from experienced persons in the field of Physical Geography and teaching backgrounds.

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGOs – Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

The position is based in Jaffna. The selected candidate will be responsible in facilitating a multi-media *PowerPoint* presentation on the science and geography behind a Tsunami and other natural hazards. These workshops will be conducted in Transit Camps and Schools across the district.

Required qualifications:

- A university graduation in geography.
- At least two years teaching experience.
- Advanced communication skills. A high command of written and spoken English would be an advantage.
- Computer literacy (knowledge of *PowerPoint* software would be helpful)
- Available to work in the daytime and evenings.

Cover letter and curriculum vitae should be addressed to TEP Project Manager, No. 156, Jaffna Road, Paranthan, Kilinochchi. Applications are invited from male/female candidates including persons with disabilities who possess relevant experience. Deadline for applications is 2nd August 2005.

(சி.12349)

யாழ்ப்பாணம்

சேதுசமுத்திரத் திட்டம் தொடர்பாக இலங்கையுடன் முதலாம் திகதி பேச்சு

இந்திய மத்திய அமைச்சர்- டி. ஆர். பாலு

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்தால் இலங்கையின் நலன்களுக்கு எவ்வித பாதிப்பும் நேராது. இதுதொடர்பாக இலங்கை குழுவினருடன் வரும் முதலாம் திகதி பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இந்திய மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டப்பணிகள் தொடர்பாக திருநெல்வேலியில் ஆய்வு மேற்கொண்ட மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது;

கோடியக்கரை அருகே சேது சமுத்திரக் கால்வாய் அகழ்வுப் பணிகளை பொதுத்துறை நிறுவனமான இந்திய அகழ்வுப் பணிக்கழகம் இரவு பகலாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்தப் பணிகளால் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக ஆராய்ச்சி வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். ஆய்வுப்பணி குறித்த விவரங்கள் சேதுசமுத்திரக் கழகத்தின் இணையத்தளத்தில் நாள்தோறும் வெளியிடப்படும்.

அகழ்வுப் பணியின் மூலம் இதுவரை சுமார் மூன்று இலட்சத்து 90 ஆயிரம் கனமீற்றர் அளவிற்கு கால்வாய் தோண்டப்பட்டுள்ளது. கோடியக்கரை அருகே பாக். ஜலசந்திப் பகுதியில் இந்திய அகழ்வுப் பணிக்கழகம் மேற்கொண் டுள்ள 13.57கி.மீ. நீளக் கால்வாய் தோண்டும் பணிகளில் இதுவரை சுமார் ஏழு கி.மீ நீளத்திற்கு சுமா 20 செ.மீ. ஆழத்திற்குத் தோண்டும் பணி நடைபெற்றுள்ளது. மன்னார் வளைகுடாப் பகுதியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

சேதுசமுத்திரத் திட்டப் பணிகளால் மீனவர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. இத்திட்டத்திற்கு மீனவர்கள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாக வெளியாகும் செய்திகளுக்கு ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் தூண்டுதலே காரணமாகும்.

சேதுசமுத்திரத்திட்டத்தினால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் என்று கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. சேதுசமுத்திரத் திட்டம் தொடங்கியபின் இலங்கையிலுள்ள காங்கேசன் துறைத் துறைமுகம் வளர்ச் சியடையும் வாய்ப்புக்கள் உள்ளன.

ஏற்கனவே இலங்கை அரசின் வல்லுனர் குழுவிற்கு இத்திட்டம் சம்பந்தமான முழுமையான விளக்கங்களை இந்திய அரச அதிகாரிகள் அளித்துள்ளனர். இப்பேச்சு வார்த்தைகளின் தொடர்ச்சியாக அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை வரும் ஓகஸ்ட் முதல் திகதியன்று டில்லியில் நடைபெறவுள்ளது என டி. ஆர். பாலு தெரிவித்தார்.

புகையிரதத்தில் தீக்குளித்த வாலிபர் அடையாளம் காணப்பட்டார்

தமிழக சேரன் எக்ஸ்பிரஸ் புகையிரதத்தில் தீக்குளித்த வாலிபர் சென்னையை சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். சென்னையில் இருந்து கோயம்புத்தூருக்கு சென்ற சேரன் எக்ஸ்பிரஸ் புகையிரதத்தில் கடந்த வாரம் தீ விபத்து ஏற்பட்டது. இதில் இரு பெட்டிகள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தன. புகையிரதப் பெட்டி ஒன்றில் 23 வயது மதிக்கத்தக்க வாலிபர் உடல் கருகிய நிலையில் பிணமாகக்கிடந்தார். அந்த வாலிபர் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தது. தெரியவந்தது. அந்த வாலிபர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்? என்று அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் பொலிசார் திணறினர்.

அப்போது அவரது நாட்குறிப்பேட்டில் அவர் பெற்றோருக்கு எழுதிய கடிதம் ஒன்று இருந்தது. அதில் என்னை நன்றாகப் படிக்க வைத்து ஆளாக்கினீர்கள் சென்னையில் நல்ல வேலையும் கிடைத்தது. ஆனால் கெட்ட நண்பர்களால் சீரழிந்தேன் இதனால் என் வேலையும் போய்விட்டது நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன் என்னைத் தேடவேண்டாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆதாரங்களை வைத்து விசாரணை நடத்திய பொலிசார் குறிப்பிட்ட இளைஞர் சென்னையைச் சேர்ந்த ரவிக்குமார் என அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

சோனியா பதவி வகிப்பதை எதிர்த்து உயர் நீதி மன்றில் வழக்குப்பதிவு

காங்கிரஸ் தலைவராக சோனியா காந்தி பதவி வகிப்பதை எதிர்த்து டில்லி உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக சோனியா காந்தி சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைவராக சோனியா காந்தி பதவி வகிப்பதை எதிர்த்து டில்லி உயர்நீதிமன்றில் ராஷ்ட்ரீய முக்தி மோர்ச்சா வழக்குத் தொடர்ந்துள்ளது. அவர்கள் தாக்கல் செய்த மனுவில் "சோனியாகாந்தி காங்கிரஸ் தலைவராக பதவி விகப்பது இந்திய அரசியல் சட்ட விதிகளை மீறுவதாக உள்ளது இது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கு விரோதமானது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் "இந்தியாவில் பிறந்த ஒருவரே கட்சியின் உயர்ந்த பதவியை வகிக்க முடியும் என்ற வாதம் பயனற்றது" என்று கூறினார்கள் அதன் பின் இந்த வழக்கு விசாரணையை அடுத்த மாதம் (ஓகஸ்ட்) 24 ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

இந்திய மக்கள் தொகை 2026 இல் 140 கோடியாகும்; இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எச்சரிக்கை

இந்திய மக்கள் தொகை 2026 ஆம் ஆண்டில் 140 கோடியை எட்டும். மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டுக்கு விடப்பட்ட பெரும் சவால் என்று மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

டில்லியில் மக்கள் தொகை பற்றிய தேசிய ஆணையத்தின் முதல் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமை தாங்கிப் பேசினார். அவர் அங்கு கூறுகையில்;

இப்போது நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களில் முக்கியமான சவால் மக்கள் தொகைப் பெருக்கம்தான். இதை எப்படியாவது நிலைப்படுத்தியாக வேண்டும். 1951 ஆம் ஆண்டு 36 கோடியாக இருந்த மக்கள் தொகை தற்போது 110 கோடியாக உயர்ந்துவிட்டது. இந்தநிலை நீடித்தால் 2026 ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகை 140 கோடியை எட்டிவிடும். இன்னும் பத்து ஆண்டுகளில் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்கும்.

நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு மனிதவளம் முக்கியமானதுதான். ஆனால் மேம்பட்ட வாழ்க்கைத்தரத்தை அடைய குறிப்பிட்ட அளவு மக்கள் தொகை அளவைத்தான் சுற்றுச்சூழல் தாங்க முடியும். எனவே மக்கள் தொகையை நிலைப்படுத்துவது அவசியம்.

மக்கள் தொகை நிலைப்பாட்டுக்கு கல்வி, சுகாதார மேம்பாடு குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அவசியம். உடல்நலம், கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடு போன்ற வற்றிலும் கவனம் செலுத்தப்படும். மக்கள் தொகையை நிலைப்படுத்துவதை கட்டுப்பாடாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்றும் அவர் பேசினார்.

ரை பெற்றுத்தராத மத்திய அரசை கண்டித்து
கன ஆர்ப்பாட்டம்.

காவிரி நீரைத் திறக்கக் கோரி அ.தி.மு.க. சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஆண்களும், பெண்களும் வெறும் குடத்துடன் வந்து கலந்து கொண்டனர்

இன்று தொடங்கும் மழைக்கால கூட்டத் தொடரில் 50 இற்கு மேற்பட்ட பிரச்சினைகள் எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டம்

இந்திய பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இந்தக் கூட்டத் தொடரில்50இற்கும் மேற்பட்ட பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

கடந்த பாராளுமன்றக் கூட்டத் தொடர்களின் போது அவையை நடத்த விடாமல் எதிர்க்கட்சிகள் குழப்பம் செய்தன. மேலும் குற்றவழக்கு மந்திரிகள் தொடர்பாக பாராளுமன்றப் புறக்கணிப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்த சூழ்நிலையில் இன்றைய பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் தொடங்குகிறது.

இந்தக் கூட்டத்தொடரில் இந்தியா-அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம், ஈரான்- பாகிஸ்தான்-இந்தியா எரிவாயு குழாய் திட்டம், அயோத்தி தாக்குதல் உள்ளிட்ட 50 பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் எழுப்புவோம் என்று பா.ஜ. கஅறிவித்துள்ளது.

இதனிடையே பீகார் மாநிலத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் ஆறாம் திகதி வரை சனாதிபதி ஆட்சியை நீட்டிக்கக் கோரும் தீர்மானம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருக்கிறது. அப்போது பீகார் சட்டசபை கலைப்புப் பிரச்சினையை எழுப்பவும் பா.ஜ.க திட்டமிட்டுள்ளது. மேலும் குற்றவழக்கு மந்திரிகள் பிரச்சினையை மீண்டும் கிளப்ப பா.ஜ.க வியூகம் வகுத்துள்ளது.

எனினும், பாராளுமன்ற கூட்டத் தொடரை முன்பு போல் முடக்க மாட்டோம் என்று பா.ஜ. க தலைவர்கள் சபாநாயகரிடம் உறுதியளித்துள்ளனர். இதேபோன்று பாராளுமன்றக் கூட்டத்தொடரில் எந்தப் பிரச்சினை பற்றியும் விவாதிக்கத் தயார் என்று பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையில் மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு அளிக்கும் இடதுசாரிகளும் இந்தியா-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம், எரிவாயு குழாய் இணைப்புத் திட்டம், தனியார்மயமாக்கல் ஆகியவை குறித்து பாராளுமன்றத்தில் பிரச்சினை எழுப்ப திட்டமிட்டுள்ளன எனத்தெரிகிறது.

எரிவாயுத்திட்டம் கைவிடப்படமாட்டாது என்கிறார் மணிசங்கர் ஐயர்

ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு குழாய் மூலம் எரிவாயு கொண்டு வரும் திட்டம் கைவிடப்படமாட்டாது என்று இந்திய மத்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர் தெரிவித்தார்.

ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு இயற்கை எரிவாயு கொண்டுவரும் திட்டம் பற்றி ஈரான், பாகிஸ்தான் அரசுகளுடன் இந்திய பெற்றோலியத் துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் பேச்சு நடத்தியிருக்கிறார்.

அண்மையில் அமெரிக்கா சென்ற பிரதமர் மன்மோகன்சிங் இந்தியாவுக்கு அமெரிக்கா அணுசக்தி தொழில் நுட்பம் வழங்குவது தொடர்பாக அதிபர் புஷ்சுடன் ஒரு ஒப்பந்தம் செய்தார்.

இதற்குப் பதிலாக ஈரான்-இந்தியா குழாய் எரிவாயுத் திட்டத்தை கைவிட மன்மோகன்சிங் ஒப்புக்கொண்டிருப்பதாக இடதுசாரிக் கட்சிகளும், பா.ஜ.வும் குற்றம் சாட்டின.

இதற்குப் பதில் அளித்துப் பேசிய பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் அமெரிக்காவுடன் இந்தியா அணு சக்தி ஒப்பந்தம் செய்திருப்பதால் ஈரான்-இந்தியா குழாய் எரிவாயுத் திட்டம் கைவிடப்படமாட்டாது. அந்த ஒப்பந்தத்துக்கும், இந்தத் திட்டத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

ஆனாலும் ஈரான்-இந்தியா குழாய் எரிவாயுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும் சிக்கல்கள் உள்ளன. 37 ஆயிரம் கோடி நிதி திரட்ட வேண்டியிருக்கிறது. ஈரானிலுள்ள் எரிவாயு இருப்பு ஆதாரத்தையும் கணக்கிட வேண்டியுள்ளது எனத்தெரிவித்தார்.

சுதந்திரமான தேர்தல் நடைபெற 12 ஆயிரம் குற்றவாளிகளை பிடியுங்கள்

- தேர்தல் ஆணையகம் கோரிக்கை

பீகாரில் சுதந்திரமான சட்டசபைத் தேர்தல் நடைபெற வேண்டுமானால் அங்கு தலைமறைவாக இருக்கும் 12 ஆயிரம் குற்றவாளிகளை கைது செய்யுங்கள் என்று பீகார் அரசுக்கு தலைமைத் தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டிருக்கிறது.

பீகார் சட்டசபைக்கு எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில தேர்தல் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தேர்தல் ஆணையகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

கடந்த முதலாம் திகதிக்குப் பின் பீகார் பொலீசார் சட்டவிரோதமான 164 துப்பாக்கிகளையும், 18 வெடி குண்டுகளையும், 514 வெடிமருந்து பொதிகளையும் கைப்பற்றியுள்ளனர். இதில் வேகம் போதாது. தீவிரமாக வேட்டையை நடத்த வேண்டும்.

பல்வேறு தேர்தல் விதிமீறல் குற்றங்களுக்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவர்கள், தேர்தல் விதி மீறல்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள், குற்றச் செயல்களில் ஈடுபடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள். சமூகவிரோதிகள் போன்றவர்களின் பட்டியலை மாநிலப் பொலிசார் மாவட்டம் முழுவதும் தயாரிக்கவேண்டும். அப்போது தான் சட்டசபைத் தேர்தலுக்கு முன் கூட்டியே அவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்ய முடியும் எனக்கூறப்பட்டுள்ளது.

மாவீரர் ஞாபகார்த்த கால்பந்து சுற்றுப்போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ். உதைபந்தாட்ட லீக் ஆதரவில் புத்தூர் ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் மாவீரர் ஞாபகார்த்தமாக அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடை யிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இன்றைய போட்டியில் மாலை மூன்று மணிக்கு கொற்றாவத்தை சிவாணந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் விக்கி னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவற்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கீ)

யாழ். மாவட்ட ரீதியான கூடைப்பந்துப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை, தமிழீழ மாணவர் அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. இந்தச் சுற்றுப் போட்டியில் இரண்டாம் சுற்றுப் போட்டிக்கு பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும், ஜெலீஸ்ரார் விளையாட்டுக்கழகமும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகமும் உடுவில் விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன. (கீ)

வளர்மதி சனசமூக நிலைய 40 ஆம் ஆண்டு நினைவு கரப்பந்தாட்டப் போட்டி

மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலையத்தின் 40ஆவது ஆண்டு விழாவையொட்டி யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளை ஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 8.00 மணிக்கு மின்னொளியில் நடைபெற்ற இறுதி யாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி இரு சுற்றுக்களையும் கைப் பற்றிக்கொண்டபோது இறுதிச்சுற்று ஆரம்பமானது. மிகவும் விறுவிறுப்பாக நடந்த இந்தச் சுற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. வெற்றி பெற்றதன் மூலம் சம்பியனானது.

நடைபெற்ற சுற்றுக்களில் 26-27, 25-22, 17-25, 23-25, 11-15 என்ற புள்ளி அடிப்படையில் 3-2 செட்கணக்கில் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் அச்சுவேலி வாலிபர் விளையாட்டுக்கழகம் போட்டிக்கு சமுகம் கொடுக்காத காரணத்தால் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகத்துக்கு நேரடியாக வெற்றி வழங்கப்பட்டுள்ளது. (கீ)

கரைச்சிப் பிரதேச கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி நாளை ஆரம்பம்

கரைச்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளதாக கரைச்சிப் பிரதேச விளையாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

மாலை 2.30 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிகள் மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, போட்டிகளில் கலந்து கொள்ளும் கழகங்கள் மெய்வன்மை வீரர்களை தயார்ப்படுத்திக்கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச விளையாட்டு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கால்பந்து போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சபை நடாத்தும் கால்பந்துப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற தமிழீழ விளையாட்டுத் துறையில் பதிவு செய்யப்பட்ட கரைச்சிப் பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஐந்தாம் திகதி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபை, தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.ஒரு கழகத்திலிருந்து ஒரு அணி மாத்திரமே பங்கு பற்ற முடியும் எனவும் அவர்களின் பெயர் விபரங்களும் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

முக்கோண ஒரு நாள் போட்டி சிறிலங்கா அணியில் இரு புதுமுகம்

எதிர்வரும் 30 ஆம் திகதி சிறிலங்காவில் ஆரம்பமாகவுள்ள முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான சிறிலங்கா அணியில் இரு அறிமுக வீரர்கள்இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

இடது கை துடுப்பாட்ட வீரரான உப்புள் தரங்கவும் சகலதுறை வீரரான தில்கார லொக்கு ஹெட்டிகே ஆகிய இரு புதுமுக வீரர்களே அவர்களாவர்.

தம்புள்ளயில் நடைபெறும் முதலாவது போட்டியில் இந்திய, சிறிலங்கா அணிகள் மோதும், அணி விபரம் : மாவன் அத்தப்பத்து (தலைவர்) மகேலஜயவர்த்தன, சனத்ஜெயசூரிய, குமார் சங்கக்கார, உப்புள்தரங்க, திலக்கரத்ன தில்ஷான், ரஷல் ஆனல்ட், சமிந்தவாஸ், உப்புள்சந்தன, முரளிதரன், நுவன் சொய்சா, தில்கார பெர்னாண்டோ தில்கார லொக்கு ஹெட்டிகே, பர்விஷ் மக்ரூப் லசித் மாலிங்க ஆகியோர்.

அஸ்கிரிய டெஸ்ட் சங்கக்கார சதம்; வலுவான நிலையில் சிறிலங்கா





கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று தனது இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் சிறிலங்கா அணி சங்கக்காரவின் அபார ஆட்டத்தின் உதவியுடன் வலுவான நிலையை அடைந்துள்ளது.

முன்னதாக இரண்டு விக்கெட் இழப்பிற்கு 146 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிறிலங்கா மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சங்கக்கார ஆட்டமிழக்காது 135 ஓட்டங்களைப் பெற்றார். இவரைவிட டில்சான் 49, ஜெயவர்த்தன 43, ஜெயசூரிய 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் லோசன் மூன்று விக்கெட்டுக்களையும், பவல், பாங்ஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

ஆஷஸ் கிண்ண டெஸ்ட் போட்டி

மெக்ராத், ஷேன் வோர்ன் அபாரம்

அவுஸ்திரேலியாவுக்கு 239 ஓட்ட வெற்றி

வரலாற்று புகழ் வாய்ந்த இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஆஷஸ் கிண்ணத்துக்காக லோட்சில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 239 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியா நிர்ணயித்த 420 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இங்கிலாந்து 58.1 ஓவர் நிறைவில் வெறும் 180 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்து. 239 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கெவின் பீற்றர்சன் மாத்திரமே தாக்குப்பிடித்து ஆடி ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களைப் பெற்றார்.

நான்காம் நாள் ஆட்டம் மழை காரணமாக பல மணித்தியாலங்கள் தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இங்கிலாந்து அணி 156 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டை இழந்த நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. ஆனால், மெக்ராத்தின் வேகத்தில் சடுதியாகவே சரிந்தது. இங்கிலாந்து வீரர்கள் நால்வர் ஓட்ட மெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் மெக்ராத், ஷேன் வோர்ன் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பிரெட்லீ இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார்.

முதல் இனிங்சில் ஐந்து விக்கெட்டுக்களையும், இரண்டாவது இனிங்சில் நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றிய மெக்ராத் ஆட்டநாயகனாக தெரிவானார்.

அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸ் - 190 ஓட்டம், இங்கிலாந்து முதல் இனிங்ஸ் - 155 ஓட்டம், அவுஸ்திரேலியா இரண்டாவது இனிங்ஸ் - 384 ஓட்டம், இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸ் - 180 ஓட்டம்.

ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற நிலையில் அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கின்றது.

இலங்கையில் வரும் 30இல் தொடங்கும் முத்தரப்புஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணி வீரர்கள் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தனர். தலைவர் ராவிட், துணைத் தலைவர் சேவக் இருவரும் அங்குள்ள நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைகின்றனர்.

கம்பு ஊன்றி உயரம் தாண்டுதல் ரஷ்ய வீராங்கனை மீண்டும் உலக சாதனை

இங்கிலாந்தின் லண்டனில் சூப்பர் கிராண்ட் பிரிக்ஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் பெண்களுக்கான போல்வால்ட் (கம்பு ஊன்றி உயரம் தாண்டுதல்) பந்தயத்தில் ரஷ்ய வீராங்கனை எலீனா இசின்பயெவா ஐந்து மீற்றர் உயரம் தாண்டி புதிய உலக சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பு எலீனா 4.95 மீற்றர் உயரம் தாண்டியதே சாதனையாக இருந்தது. தனது சொந்த சாதனையை அவர்மீண்டும் தகர்த்தார்.

ஐந்து மீற்றர் உயரம் தாண்டிய முதல் பெண் என்ற பெருமை பெற்ற எலீனாவை, ஆண்கள் பிரிவில் 6.14 மீற்றர் உயரம் தாண்டிய உலக சாதனையாளரான செர்ஜி புப்கா வாழ்த்தினார். "ஐந்து மீற்றர் தாண்டியது எல்லையில்லா மகிழ்ச்சி அளிக்கிறது" என்று எலீனா கூறியுள்ளார்.

சிந்தனைக்கு



எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25.07.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

எதிர்காலச் சந்ததிக்காக...!

இன்று உலகின் தலையாய பிரச்சினைகளில் ஒன்றாகப் பேசப்படுவது சுற்றாடற் பிரச்சினையாகும். உலகை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் அணு ஆயுதங்களுக்கு ஒப்பானதாக அன்றி அடுத்த நிலையானதாக இப்பிரச்சினை பேசப்படுகின்றது. அந்தளவில் சூழலியற் பிரச்சினையானது இன்றைய சமுதாயத்திற்கும், நாளைய சந்ததிக்கும் பெரும் சவால் விடுக்கும் பிரச்சினையாக வளர்ச்சி கண்டுள்ளது.

பூமியிலுள்ள இயற்கை சூழல் அனைத்துமே இன்று மனிதனின் பொருளாதார மற்றும் இராணுவ அபிலாசைகளினால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. அன்றி மாற்றமடைந்துள்ளது. இதனால் பெரும் அபாயகரமானதொரு எதிர்காலத்தை நோக்கி உலகம் விரைந்து கொண்டிருக்கின்றதெனலாம்.

அதாவது பூமியின் பௌதீக அம்சங்களான நீர், நிலம், வளி ஆகிய மூன்றும் இன்று மாசடைந்துள்ளன. இவ்வாறு மாசடைந்துள்ளமைக்கு மனிதனின் இயற்கையை மதியாத பொருளாதார நடவடிக்கைகளும் வேட்கைகளும் உலகத்தை ஆளத்துடிப்பவர்களின் இராணுவ முனைப்புக்களும் முக்கிய காரணங்களாகும்.

மனிதன் தனது தேவைகளுக்காகப் பெருமளவு இயற்கை வளங்களை அழித்துள்ளான். மீளாக்கம் பெறாத வளங்கள், மீள்உருவாக்கத்திற்கு மிக நீண்டகாலம் செல்லும். வளங்கள் குறித்து எந்தவித அக்கறையும் இன்றி இவ் அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் இயற்கைச் சமநிலையில் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இவை ஒருபுறமிருக்க விஞ்ஞான – தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒருபக்கமும் சூழலில் பெரும் தாக்கத்தை விளைவிப்பதாகவும் – மனித சமூகத்திற்குப் பெரும் இடையூறு விளைவிப்பதாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாகத் தொழிற்சாலைக்கழிவுகள் மற்றும் அணுக்கதிர்வீச்சுப் பொருட்கள்போன்று இயற்கையில் பெரும்பாதிப்பை விளைவிப்பனவாகவுள்ளன.

சிறிலங்கா அரசு தமிழர் தாயகத்தின் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையின்போது மேற்கொண்ட இயற்கைவள அழிப்பில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டன. பனை மரங்கள் அழிக்கப்பட்டன. அத்தோடு, எமது சூழலுக்கு இசைவாக்கத்துடன் வளர்ச்சியுற்றிருந்த தென்னை போன்ற பயன்தரும் மரங்களும் அழிக்கப்பட்டன.

அதுமட்டுமன்றி பெரும்தொகையான வெடிபொருட்களின் பாவனையால் நீர் மாசடைந்தது. படையெடுப்புக்களினாலும், ஆயுதப்படைகள் நிலைகொண்டதினாலும், தரை அமைப்பிலும் பாதிப்புகள் ஏற்பட்டன. இந்நிலையானது பூகோள ரீதியில் இயற்கை சந்தித்துள்ள சவால்களுக்கு மேலதிகமாகவும் தமிழர் தாயகத்தில் இயற்கை சவால்களைச் சந்திக்க வேண்டியதாகியது.

மனிதனால் சூழலில் ஏற்படுத்தப்படும் தாக்கம் ஒருபுறம் இருக்க, இயற்கையின் தொல்லைகளினால் சூழலில் ஏற்படும் மாற்றங்களும் பாதிப்புகளை விளைவிப்பதாகவே உள்ளன. குறிப்பாக எரிமலை வெடித்தல், நிலநடுக்கம், மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற கடல் எழுச்சிகள் இயற்கையில் தாக்கம் புரிபவையாகவுள்ளன.

இவ்வாறான தாக்கமானது இயற்கையில் ஏற்படுத்தும் பாதிப்பானது பூமியில் எதிர்காலத்தில் உயிரினங்களின் இருப்பையே பெரும் கேள்விக்குள்ளாக்குபவையாகவும் உள்ளன. இவ்வாறான பல்வேறு அம்சங்களும் இயற்கைக்கு இன்று விடுத்துள்ள சவால் காரணமாகவே சூழல் பாதுகாப்புத் தொடர்பான விடயம் பெரும் முக்கியத்துவம் மிக்கதாகியுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலை உலகில் நிலவுகையிலேயே தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பெற்றுள்ளது. அதாவது தமிழர் தாயகத்தின் எதிர்காலம் குறித்து நீண்ட தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் இவ் ஆணையம் உருவாக்கம் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதொன்றே.

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் சூழல் பாதுகாப்பில் நீண்டதொலைநோக்குடன் செயற்பட்டமைக்குக் விடுதலைப்புலிகளின் கடந்தகால செயற்பாடுகளே சான்று பகர்ந்துள்ளன. அதாவது இயற்கை வளங்களை பாதுகாப்பதிலும், வனவளங்களில் மீள் உருவாக்கம் செய்யக்கூடியவற்றை மீள் உருவாக்கம் செய்வதிலும் தேசியத்தலைவர் அவர்கள் அக்கறை கொண்டிருந்தார் என்பதனை காடழிப்பிற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், மணல் அகழ்விற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், பனை, தேக்கு போன்றவற்றின் மீள் நடுகை போன்ற முயற்சிகளை சுட்டிக்காட்ட முடியும்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் ஆரம்ப நிகழ்வில் பேசுகையில் குறிப்பிட்டது போன்று எமது மக்கள் மீது எவ்வாறு ஒரு ஆக்கிரமிப்பு இன வன்முறை தொடுக்கப்பட்டதோ அதே போன்று எமது இயற்கை வளங்கள்மீதும் தொடுக்கப்பட்டதென்பதே உண்மையாகும்.

இந்நிலையில் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் நிறுவப்பட்டமையானது காலத்தின் தேவையாகவும், கட்டாயமாகவும் உள்ளது. இந்த வகையில் எதிர்கால சமுதாயத்தின் நல்வாழ்வு நோக்கிய முன்னோடி நடவடிக்கையாகவே இது கொள்ளத்தக்கது.

விளையாட்டு விழா தடைக்கு எதிராக
பிரித்தானிய தமிழ் ஒன்றியம் கண்டனம்

(லண்டன்)

பிரித்தானியாவில் நடைபெற இருந்த2005 ஆம் ஆண்டு தமிழர் விளையாட்டு விழாவை பிரித்தானியப் பொலிசார் தடை செய்துள்ளமை குறித்து பிரித்தானிய தமிழ் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டிற்கான தமிழர் விளையாட்டு விழாவை வெகு சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளில் உறுதுணையாக நிற்கும் தங்களிற்கு மிகவும், அதிர்ச்சியூட்டும் செய்தியை மனவருத்தத்துடன் பிரித்தானிய தமிழர் ஒன்றியம் வெளியிட்டுள்ளது. இடநெருக்கடியையும், பாதுகாப்பு முன்னேற்றப்பாடுகளையும், காரணம் காட்டி கடந்த ஆண்டிற்கான விளையாட்டு விழாவிற்கு அனுமதி மறுத்த பொலிசார் பாரதூரமான குற்றச் செயல்களும் ஒழுங்கு மீறல்களும், சம்பவிக்கலாம் எனக் கூறி இந்த ஆண்டிற்கான விளையாட்டு விழாவையும் முடக்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

பிரித்தானியாவில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்த அமைதியான உல்லாச விழாவிற்கான நிகழ்விற்கு அனுமதியை மறுக்குமாறு நகராட்சி மன்றத்திற்கு பொலிசார் அறிவுறுத்தியுள்ளனர். இதனை அடுத்து நகராட்சி மன்றத்தினர் அனுமதி மறுத்துள்ளனர்.

குடியியல் சட்ட வரையறைகளுக்கு அமைவாகவும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்திசைவாகவும், எமது கடந்த கால விளையாட்டு விழாக்கள் நிகழ்ந்தேறியுள்ளதை, எமது சமூகத்தை விட இந்த நாட்டுப் பொலிசார் நன்கு அறிவர்.

எனினும் குற்றச் செயல்களில் ஈடுபடும் ஓரிரு வன்முறைக் குழுக்களால் ஏற்படக்கூடிய சிறிய அளவிலான அசம்பாவிதங்களையும், லண்டனில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ் நிலையின் பின்னணியில் பாரதூரமான ஒழுங்கு மீறல் அபாயங்களாகப் பொலிசார் எண்ணத் தலைப்பட்டுள்ளமை எம்மை ஆழ்ந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றது. ஒரு சில சமூக விரோதிகளின் நடவடிக்கைகளை ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயத்தின் மீது சுமத்தி இவ்வாண்டிற்கான விளையாட்டு விழாவை குற்றச் செயல்களும், ஒழுங்கு மீறல்களும் சம்பவிக்கக் கூடிய நிகழ்வாக பொலிசார் கருதுகின்றமை மிகவும் துரதிர்ஷ்ட வசமானது என அவ்வறிகையில் குறிப்பிட்டுள்ளது.

தப்பியோடிய 41, 724 இராணுவத்தினர்
அடுத்த மாதம்படையிலிருந்து விலக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா படைகளில்இருந்து தப்பியோடி மூன்று வருடங்களுக்கு மேலாக தலைமறைவாக உள்ள 41,724 படையினர் இராணுவத்தில் இருந்து விலக்கப்படவுள்ளனர்.

விஜயபாகு காலாட்படை, கஜபா ரெஜிமென்ட், சிங்கரெஜிமென்ட், சிறிலங்கா பாதுகாப்புப்பிரிவுப்படை, மற்றும் ரய்பில் ரெஜிமென்டை சேர்ந்த 41,724 படை வீரர்கள் சட்டப்படி விலக்கப்பட்டவர்களாகக் கணிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் எட்டாம் திகதி இது சம்பந்தமாக விஜயபாகு ரெஜிமென்டில் சட்டபூர்வமாக அறிவிக்கப்படுமென படைத்தரப்பு கூறியுள்ளது.

இதன் பின்பு படையில் இருந்து தப்பியோடி தலைமறைவாகியுள்ளவர்களை உடன் கைது செய்வதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அவசர வேலைத் திட்டங்கள்
அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படுமாம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அவசர அபிவிருத்தித் திட்டங்கள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச் சபையின் தலைவராக நிதி அமைச்சர் சரத் அமுனுகம கடமையாற்றுவார். பின்னர் இவரின் அறிக்கை அமைச்சின் சிபார்சுக்கு சமர்ப்பிக்கப்படும்.

சனாதிபதி சந்திரிகா தலைமையின் கீழ் கடந்த வாரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு காரியாலயத்தில் நடைபெற்றது. இந்த அபிவிருத்தி சபைக்கு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அடங்கிய 15 அங்கத்தவர்கள் இதில் கடமையாற்றுவார்கள். அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சகல அபிவிருத்தித் திட்டங்களும் இவ்வருட இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என சனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில் ஊழல்கள், நிதி மோசடிகள் ஏற்படாத வண்ணம் இக்குழு பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்வதுடன் இது நேர்மையாகக் நடைபெறுவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற் கொள்ள வேண்டுமென சனாதிபதி கடும் உத்தரவு பிறப்பித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹப்புத்தளை தோட்ட தொழிலாளர்
தாமதமாகவே பணி செய்யும் போராட்டம்

ஹப்புத்தளை கோணமுட்டாவ தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் முதல் தாமதமாக பணி செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

தமக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் அனைத்தையும் நிர்வாகம் தர மறுப்பதாக தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

இந்த நிலையில் பிரச்சினை தொடர்பில் மலையகத் தொழிலாளர் முன்னணி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை
ஜே.வி.பி.கைகழுவிவிடும்—சமரவீர

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஜே.வி.பி கைகழுவக்கூடும் என்று சந்திரிகா எதிர்ப்பு அணித் தலைவரான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் கடந்தவார சர்ச்சைக்குரிய அநுராதபுரக் கூட்டத்திற்கு தனது ஒற்றராக துணை அமைச்சர் ஒருவரை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அனுப்பி வைத்திருந்தார். கூட்டம் முடிந்த பின்பு சந்திரிகா கூறிய அனைத்தையும் பிரதமரிடம் அந்தத் துணை அமைச்சர் ஒப்புவித்துவிட்டார்.

இதையடுத்து முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவைத் தொடர்பு கொண்டு இந்தத் தகவல்கள் உண்மைதானா என உறுதிப்படுத்திக் கொண்டார். அப்போது மங்கள சமரவீரவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடலில், உங்களது பிரதமர் பதவி மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோகப்போகிறது. அதனால் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தை உடனே தொடங்க வேண்டும். விமல் வீரவன்ச உள்ளிட்ட அவரது கட்சியினர் உங்கள் மீது நம்பிக்கை இழந்து வருகின்றனர். நீங்கள் ஒரு உறுதியான வேட்பாளர் இல்லை என்று அவர்கள் கருதுகின்றனர். அவர்களும் உங்களால் வருத்தத்தில் உள்ளனர் என்று கூறினார்.

விமல்வீரவன்சவை சந்திப்பதாகக் கூறுமாறு மங்கள சமரவீரவிடம் தெரிவித்த உடனேயே தனது தொலைபேசி இணைப்பை மகிந்த ராஜபக்ஷ துண்டித்துவிட்டார். இதனால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீதான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விமர்சனங்கள் குறித்து ஊடகவியலாளர்களால் எவ்விதக் கருத்துக்களையும் அன்றைய தினம் பெற இயலாமல் போய் விட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சந்திரிகாவின் அநுராதபுர உரை; அரசியல் அவதானிகள் விசனம்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மத்தியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேசிய பேச்சுக்கள் சிறிலங்காவின் கொள்கை வகுப்பாளர்கள், அரசியல் அவதானிகள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பெயர் வெளியிட விரும்பாத கொழும்பு கொள்கை வகுப்பாளர் ஒருவர் தெரிவிக்கையில்;

உலக அரங்கில் சனநாயகம் என்பதற்கும், அரசியல்விழுமியங்கள் என்பதற்கும். எவ்வித பொருத்தமற்ற ஒரு நாடு இப்போதும் இருப்பது என்பது வெட்கக்கேடானது. ஆனால் எமது நாடு அப்படியான ஒரு நாடுதான் என்பதை ஒரு நாட்டின் சனாதிபதி பொறுப்பில் இருப்பவர் ஒப்புக்கொண்டு இருப்பது அதைவிட வெட்கக் கேடானது.

உலக அரங்கிலுள்ள சனநாயக நாடுகளில் அரசியல் கட்சிகளிடையே மோதல்கள் எழுவதும், நட்புக் கொள்வதும், தேர்தலைச் சந்திப்பதும் வழமையானது. ஆனால் மக்களுக்கான நிவாரணப்பணத்தைத் திருடுகிறவர் எங்களது பிரதமர். உள்நாட்டு கலகத்தை உருவாக்கும் பேரினவாதிகளின் இராணுவ- அரச நிர்வாக ஊடுருவல்கள் என்று ஒரு சனாதிபதி ஒப்புதல் வாக்கு மூலம் கொடுப்பதும் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் நானே ராஜா நானே மந்திரி, நானே இன்றும் நாளையும் சாகும்வரை கட்சித்தலைவர் என்கிற சர்வாதிகார வெளிப்பாடும் சிறிலங்கா ஒரு நாடாக நீடிப்பதற்கான தகுதியை இழந்துவிட்டாகவே கருதலாம்.

இப்படியான ஒரு தேசம் உலக அரங்கில் இன்னும் இருப்பது அரசியல் விழுமியங்களின் அவலம் என்பதைத்தவிர வேறு எதுவும் இல்லை. அண்மையில் சிறிலங்கா இராணுவத் தளபதிகளின் இடமாற்றம் தொடர்பாக முப்படைத் தளபதி தயாசந்தகிரிக்கும், சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையேயான மோதலைக் சுட்டிக்காட்டிய அவர், மேலும் சில தகவல்களைத் தெரிவித்தார்.

தனது நாட்டின் இராணுவத் தளபதி ஊழல் செய்கிறார் என்பதை ஒப்புக் கொள்ளும் விதமாக இராணுவத் தளபாடக் கொள்வனவுகளையும் தற்போது அரசு தடை செய்துள்ளது. ஆனால் அவரை வீட்டுக்கு அனுப்பும் திறமை சந்திரிகாவுக்கு இல்லை. காரணம் சந்திரிகாவே கடந்த வாரம் ஒரு நிகழ்வில் பேசுகையில் குறிப்பிட்டது போல் இராணுவத்திலும் ஜே.வி.பியினர் ஊடுருவிவிட்டனர் என்பதுதான். இதை அறிந்துகொண்ட சந்திரிகா, பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திடப்பட்ட நிலையில் நாட்டில் சர்வாதிகார ஆட்சியோ அல்லது இராணுவ ஆட்சியோ நடைபெறக் கூடும் என்று கூறியிருந்தார் என்றார் அவர்.

மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கின்ற- அதிகார வேட்டைக்காக அலைகின்றவர்களாக சிங்களவர்கள் இருப்பதை அறிந்துகொண்டதாலோ என்னவோ ஆழிப்பேரலை நிவாரண நிதியைக் கூட தற்போது சர்வதேச சமூகம் கையளிக்க மறுக்கிறதோ என்ற சந்தேகம் எழுவதாகவும், அரசியல் காரணங்களுக்காகத்தான் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளைக்காரணம் காட்டியிருக்கக்கூடும் என்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஏழாவது ஆண்டு நிறைவில் சூரியன் வானொலிசேவை

(கொழும்பு)

சூரியன் எவ்.எம். வானொலி இன்று தனது ஏழாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. 1998 ஜுலை 25 ஆம் திகதி 24 மணிநேர சேவையாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வானொலி அனைத்து வகையான நிகழ்சிகளையும் வழங்கி வருகின்றது. விஞ்ஞானம், அரசியல், சமூகவியல், பொருளாதாரம், இலக்கியம் எனப் பலதுறை நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புவதன் மூலம் அனைத்துத் தரப்பிலும் இவ் வானொலி ரசிகர்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (32)

கட்டுத்துவக்கு வெடித்து இளைஞன் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

வெற்றிலைக்கேணிப்பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவமானது நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.வெற்றிலைக்கேணி புல்லாவெளி எனும் பகுதியில் இளநீர் வெட்டச்சென்ற முள்ளியான் பகுதியில் வசிக்கும் அன்னாத்துரை ஜெகன் (வயது-16) என்பவரே கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார்.

இவர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துவரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (கு)

இந்திய உதவி உயர்ஸ்தானிகரின் வாகனம் கண்டுபிடிக்கப்படவில்லை

(கொழும்பு)

கடத்திச்செல்லப்பட்டுள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகரின் வாகனம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் வரக்காபொல பிரதேசத்திலுள்ள அம்பேபுஸ்ஸையில் வைத்து கடத்திச்செல்லப்பட்ட பிராடோ ரகத்திலான இந்த வாகனத்தைக் கண்டுபிடிப்பதற்காக 12 பொலிஸ்குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த வாகனத்தை கண்டுப் பிடிப்பதற்காக அனைத்து வாகனம் திருத்தும் மையங்களையும் சோதனையிடுமாறு பொலிஸ் மா அதிபர் பொலிசாருக்கு பணித்துள்ளார். (32)

எழுவைதீவு இறங்குதுறையைப் புனரமைக்க சிறிலங்கா கடற்படை தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.எழுவைதீவு இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்வதற்கு சிறிலங்கா கடற்படை தடை விதித்துள்ளது.

நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படும் எழுவைதீவு இறங்குதுறையை தொண்டு நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்ய அண்மையில் நடவடிக்கை எடுக்கப் பட்டது.

எழுவை தீவு கடற்றொழிலாளர்களதும், ஏனைய தீவுப் பகுதிகளில் இருந்தும் இங்குவந்து செல்லும் பயணிகளினதும் நலன்கருதியும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் எழுவைதீவு இறங்குதுறையை புனரமைக்கும் நடவடிக்கைகள் கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்ட போது அங்கு வந்த கடற்படையினர் இறங்குதுறை புனரமைப்பைக்கைவிடுமாறு கூறினர்.

மேற்படி இறங்குதுறை புனரமைப்பு எழுவைதீவில் நிலைகொண்டுள்ள கடற்படையினரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாவதால் இந்நடவடிக்கைகளை உடன் கைவிட வேண்டும் என நிர்ப்பந்தித்ததுடன் கடற்படையின் உயர் அதிகாரிகளின் அனுமதிபெற்று இறங்குதுறையைப் புனரமைக்குமாறும் கூறினர். இதனால் புனரமைப்புப் பணிகள் கைவிடப் பட்டன. (33)

கிளி.யில் பாம்புக்கடிக்கு மூன்று பேர் இலக்காகினர்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த இரு தினங்களில் மூவர் பம்புக்கடிக்கு இலக்காகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஒருவரும் நேற்றைய தினம் இருவரும் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளனர். நேற்றைய தினம் கோரக்கன்கட்டு பரந்தனைச் சேர்ந்த கலைச்செல்வி (வ்யது-32) பூநகரியைச் சேர்ந்த குமார் (வயது-27) ஆகிய இருவரும் பாம்புக்கடிக்கு இலக்காகி கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (கு)

சுப்பர்மடம்...

மீன்பிடித் தொழிலில் ஈடுபட கடலுக்குச் சென்றுள்ளனர். அவ்வேளையில் வழி தவறி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்கின் கரையோரப் பகுதியில் கரைசேர்ந்துள்ளனர். அவ்வேளையில் நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் காவல் நிலையில் வைத்து அவர்கள் பாதுகாப்பாக பருத்தித்துறைக்குச் செல்லுமாறு திருப்பி விடப்பட்டுள்ளனர்.

அவ்வேளையில் பருத்தித்துறை நோக்கி கடற்கரையூடாக படகில் திரும்பிக் கொண்டிருந்தவர்களை கரையோரக் காவல் நிலையிலிருந்த படையினர் பிடித்திருந்தனர். எனினும் தாம் வழிதவறி படகில் சென்றிருந்ததாக மீனவர்கள் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

இதேவேளை, மூன்று மீனவர்களும் படையினரால் நாகர்கோவில் பகுதியில் பிடிக்கப்பட்ட செய்தி வெளியானதும் அவர்களது இடமான சுப்பர் மடம் பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது. திரண்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் இது தொடர்பாக பொலிசாருக்கு அறிவித்திருந்தனர். (27)

நிக்கோபாரில்...

இதன் தாக்கம் கொழும்பின் சில பகுதிகளிலும் தமிழ்நாட்டு கரையோரத்திலும் சிறிய நடுக்கமாக உணரப்பட்டதாக இறுதியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

பிரதமர்...

எனக்கு விருப்பமில்லைதான். இது தொடர்பாக மிகச் சிறிய அளவில் தான் ஆலோசனை நடத்தி இருக்கிறேன். ஆனால் நமது கட்சியைச் சேர்ந்த சிலர் எனது இல்லத்திற்கு வந்து இரவும் பகலுமாக என்னிடம் வலியுறுத்தி பாராளுமன்றத்தைக் கலைக்க வைத்தனர். அவர்கள்தான் என்னை ஜே.வி.பியுடன் அணிசேர வைத்தனர். நான் அவர்களுக்கு அப்போதே விளக்கினேன். இது நம் கட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று கூறினேன். ஆனால் இந்தக் கட்சியின் வரலாற்று ரீதியான உணர் வுகளைப் புரிந்துகொள்ளாமல் நமது கட்சியில் இருக்கும் சில சக்திகள் தான் இந்தக் கூட்டமைப்பை உரு வாக்க ஆர்வம் காட்டின.

இவர்கள் அனைவரும் அரச, அதிகார இலாபங்களைப் பெறவிரும்புகிறவர்கள். சொந்தக் கட்சியையே காட்டிக் கொடுத்தவர்கள்இவர்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்தது என்ன? அமைச்சுப் பொறுப்பில் இருந்த ரவிகருணாநாய்க்க மற்றும் ராஜிதசேனாரட்ன போன்றவர்கள் ஒழுக்கங்கெட்ட முறையில் என்னை ஏசினார்கள். கடைசியில் விமல் வீரவன்சவும் என்னைத் தாக்கிப்பேசினார்.

யார் இந்த விமல் வீரவன்ச? பாராளுமன்றத் தேர்தலின்போது என்னிடம் மண்டிபோட்டு ஆசனங்களைப் பிச்சைபெற்று நமது வாக்குகளைக் கொண்டு பாராளுமன்றத்தில் நுழைந்தவர்தான் இந்த விமல் வீரவன்ச. ஒவ்வொரு தெருமுனையிலும் என்னை ஒழுக்கங்கெட்ட முறையில் விமர்சனம் செய்து வருகின்றனர். அரச தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் எல்லா அபிவிருத்தித் திட்டங்களையும் அவர்கள் முடக்கினார்கள். இனியும் இவர்களது தொல்லையை அனுமதிக்க முடியாது என்ற நிலையில் நான் மேற்கொண்ட முடிவால் அரசிலிருந்து அவர்கள் வெளியேறினர். அவர்கள் வெளியேறிய போதும் அரசு கவிழ்ந்து விடவில்லை. மீண்டும் கூட்டமைப்பை உருவாக்க நான் அவர்களிடம் பிச்சை எடுக்கப் போவேன் என்று அவர்கள் கருதி இருந்தார்கள். ஆனால் அரசும் கவிழவில்லை. அரசு கவிழவே கவிழாது என்று சொன்னேன். கூடையில் உள்ள ஒவ்வொரு மலரும் கடவுளுக்குச் செலுத்தப் படலாம். ஆனால் மலர்கள் கடவுளாகிவிட முடியாது. அது போல் நாட்டின் சனாதிபதிப்பதவியும் நானே இன்றும், நாளையும் என்றும் நானே கட்சித்தலைவர். எனது தாயார் இருந்தபோது அவருக்கு எதிராக மைத்திரிபால சேனநாயக்க உள்ளிட்ட சிலர் செயற்பட்டனர். அப்போது அவர் வயதானவராக இருந்ததால் அதை எதிர்கொள்ள இயலாமல் அதிகாரத்தை விட்டுக் கொடுத்து சமரசம் செய்துகொண்டார். ஆனால் இப்போது நானே எல்லாம். நானே முதன்மையானவள். இன்னும் குறிப்பிடும்படியான காலத்துக்கு நானே இருப்பேன். அதனால் கட்சித் தலைமையை யாருக்கும் விட்டுக் கொடுக்கும் எண்ணம் எனக்கில்லை.

நாட்டின் அரச தலைவர் வேட்பாளரை நானே தேர்வு செய்வேன். கட்சி எனும் கூடையில் உள்ள மலர்களில் எது உகந்ததோ அதை நானே தேர்ந்தெடுப்பேன். மிகவும் நேர்மையான மனிதருக்கே அந்தப் பதவி கொடுக்கப்படும். நாட்டு மக்களின் பணத்தைத் திருடுபவர்கள். மக்களைக் கொலை செய்பவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள்.. அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வர இயலாது. நானோ எனது தாயாரோ அல்லது எனது அப்பாவோ கொலைகாரர்கள் அல்ல. மக்களின் பணத்தை ஒரு போதும் திருடியதில்லை. அரசியலில் நங்கள் பாரிய தியாகங்களைச் செய்துள்ளோம். இந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வருபவர் ஊழலற்ற நேர்மையாளராக இருக்க வேண்டும்.

ஜே.வி.பி.யுடன் இரகசிய சதித்திட்டம் எனக்கு எதிராகத் தீட்டப்படுகிறது. இது குறித்த இரகசியப் பேச்சுக்களும் நடைபெறுகின்றன. அது ஒரு போதும் நடக்காது. அவர்களது கூட்டணி வெற்றியடையாது. நீங்கள் பதிவு செய்து வைத்துக்கொள்ளுங்கள். எல்லோரும் நாட்டின் தலைவராகிவிட முடியாது. நல்ல திறமையுள்ளவர்கள்தான் அரச பொறுப்பிற்கு வர முடியும். பிறப்பிலிருந்தே பரம்பரையாக இத்தகைய குணங்கள் இருக்க வேண்டும். சிறிலங்காவில் நிறைய பரம்பரைக் குடும்பங்கள் உள்ளன. ஆட்சிப் பொறுப்பு குறித்த அவர்களது கனவு பகல் கனவுதான். அது பலிக்காது.

ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறுவதற்கு முன்பாக எமது கட்சியைச் சேர்ந்த சிலரேஅவர்கள் தரப்பிலிருந்து சில செய்திகளைக் கொண்டு வந்தார்கள். அதில் ஜே.வி.பி. வெளியேறினால் அரசு கவிழ்ந்து விடும் என்றும் எச்சரித்திருந்தார்கள். அதை நான் பொருட்படுத்தவில்லை. அவர்கள் இப்போது மீண்டும் சரணாகதி அடைந்து விட்டார்கள். எங்களை மீண்டும் முட்டாளாக்க முடியாது. மக்களை ஈர்ப்பதற்காக ஜே.வி.பி காட்சிகளை நடத்திக் கொண்டு இருக்கிறது. கேடு கெட்ட நாளிதழ்களையும் சில தொலைக் காட்சிகளையும் வைத்துக் கொண்டு அவர்கள் பரப்புரை மேற் கொள்கிறார்கள். அதில் ஜே.வி.பி வெற்றி பெறாது. அண்மைக் காலத்தில் அரச ஊடகங்களும் கூட நமக்குச் சார்பாக இல்லை. அதிலும் ஜே.வி.பியினர் ஊடுருவிவிட்டனர் என்றார் சந்திரிகா.

இக்கூட்டத்தில் சந்திரிகாவுக்கு எதிராக ஜே.வி.பியுடன் அணி சேர்ந்து செயற்படும் மங்கள சமரவீரவும் பங்கேற்று இருந்தார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மெகா புலமைப்பரிசில் பரீட்சை அறிவித்தல்

10-07-2005 ஞாயிறு அன்று நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பதிவுகள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ASIAN COMPUTERS

♦ யாழ்ப்பாணம் ♦ சுன்னாகம் ♦ சாவகச்சேரி
♦ நெல்லியடி ♦ கிளிநொச்சி (கணினியியல் கல்லூரி)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது